JANAVINODINI.

ஜநவிநோதிநி.

இல. 8, 9.] {ஆகஸ்டுமீ செப்டெம்பர்மீ} 1882. [புஸ்த. XIII.

CONTENTS. அட்டவணை.

CONTENTS.		அட்டவணை.	
The Suez Canal	171	சுவேஸ்கால்வாய்	171
Secrets of Success	173	நன்மைபெறுவதற்குரியநுட்பங்கள்.	173
Fortune in a Pin	179	குண்டூசியிற் கண்ட கருந்தனம்	179
The Family of Mankind	182	மன்னுயிர் குடும்பவாழ்க்கை	182
It is never too late to Learn...	187	கல்விகற்கக் காலவியதியுண்டோ?..	187
Notes about Kerosene Oil	192	கெரோவஸீன் எண்ணெயைப் பற்றி..	192
A Wonderful Bed	196	அற்புதமான ஒரு கட்டில்	196
The chief use of Biography ...	206	பெரியோர் சரித்திரங்களாலாகும் பெரும்பயன்	206
The Child's Corner	210	சிறுவர்க்கான கதை	210
News	214	சமாசாரம்	214

MADRAS:

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.

TO OUR READERS.

In commencing a new volume of *Janavinodini*, we bid all a hearty welcome to its pages, and wish to remind them that, while the seasons pass quickly by, here we are still at our post, unchanged at least in one thing—our desire to please and interest our readers as far as we can; and the knowledge that our readers think kindly of us and of our work performed under difficulties will give us fresh energy for the coming year. Every month we shall put in something in the pages of *Janavinodini* adapted for nearly all ages, as well as interesting stories fitted for home use.

This Magazine requires now as much support as it is possible to secure, and this may be given in three ways; (1) By annual subscriptions *paid in advance*, and special donations for providing suitable pictures to charm the young more than ever; (2) By making the Magazine more widely known with a view to give it a larger circulation both in Town and Country; and (3) By literary contributions suited to the pages of the Magazine.

We take this opportunity to thank the able writers who during the past year kindly contributed some useful papers to *Janavinodini*, and hope that we shall continue to receive more of such co-operation in the year which has begun.



THE SUEZ CANAL.—சுவேஸ்கால்வாய்.

ஜநவிநோதிநி.

இல. 8, 9.] { ஆகஸ்டுமீ
செப்டெம்பர்மீ } 1882. { புஸ்த. XIII.

சுவேஸ்கால்வாய்.

ஐரோப்பாவுக்கும் இவ்விந்தியா முதலிய கீழ்த்தேசங்களுக்கும் போக்குவரவு செய்யச் சுலபமான வழியொன்று வேண்டுமெனக் கருதி, அங்கிலேயரும் பிரஞ்சுக்காரருமாய்க் கூடி இருபதுகோடி ரூபாய் செலவுசெய்து பூமத்திய சமுத்திரத்திற்கும் செங்கடலுக்கும் இடையிலுள்ள பூசந்தியை வெட்டிக் கப்பல்கள் சாதாரணமாய்ப் போக்குவரவு செய்வதற்குத் தகுந்ததும், 88-மைல் நீளமும், 26 அடி ஆழமுமுள்ளதுமாய் சுவேஸ் கால்வாயெனப் பேர்பெற்ற ஒரு பெரிய வாய்க்காலாக்கி அவ்விருகடல்களையும் ஒன்றாய்க் கூட்டுவித்தது முதலிய சுவேஸ் கால்வாயைப்பற்றிய வரலாறுகளையெல்லாம் நமது ஜநவிநோதிநியில் எட்டுவருஷங்களுக்குமுன் வெளியிட்டிருக்கிறோம். சுவேஸ்கால் வெட்டுவதற்குமுன் அங்கிலேயருடைய கப்பல்கள் லந்தன் நகரத்திலிருந்து பம்பாய்க்கு 1125 காததூரம் ஆப்ரிக்காகண்டத்தைச் சுற்றி வந்துகொண்டிருந்தன; இப்போது சுவேஸ் கால்வாயில் புகுந்துவருகிற வழியோ 635 காதத்துக்கு அதிகமில்லை. அந்தக் கால் வெட்டத்துவக்கியநாள்முதல் நாளதுவருஷத்தின் ஆரம்பம்வரையில் அவ்வாய்க்காலுக்கு எவ்விதமான அபாயமாவது நேரிட்டு, அதன் செய்தியென்ன, அதன் நிலை எத்தன்மைத்தாயிருக்கிறதென்று உலகத்தாரெல்லோரும் அதிக ஆவல்கொண்டு கேட்கும்படியான காலமொன்று சம்பவிக்குமென எவரும் கிஞ்சித்தேனும் நினைக்கவில்லை. அன்றுதொட்டு நாளதுவரையில் கப்பல்கள் நிராடங்கமாய்ப் போக்குவரவுசெய்துகொண்டிருக்கின்றன. அவ்வாய்க்காலின் வடிவமே பக்கத்துப் படத்தில் விளங்குகின்றது.

அப்படியிருக்க நாம் இப்போது சென்றமாதச் சஞ்சிகையில் குறிப்பித்தபடி சுவேஸ் கால்வாயின் மேலண்டைக்கரையைச் சார்ந்த எகிப்துதேசத்துப் போர்த்தலைவனான அரபிபாச்சா என்பவன் துர்க்கி ஸுல்த்தானால் நியமிக்கப்பட்ட அத்தேசத்து அதிகாரியான கிடைவ் என்பவர்க்கு விரோதமாய்க் கலகப்பட்டுத் தானே அத்தேசத்து அதிகாரத்தைக் கைக்கொள்ளநிற்க, அந்த அக்கிரமத்தைப் பார்க்கப்பொறாமல் "அன்பான சிநேகிதனை ஆபத்திலே அறி" என்னும் பழமொழிப்படி அங்கிலேயர் அத்தேசத்துக்கு நியாயமான அதிகாரியாகிய கிடைவுக்குத் துணையாய் அவர் பக்கத்தில் சேர்ந்துகொண்டு சண்டைசெய்து கொடுமைசெய்துவந்த அரபிபாச்சாவை அலெக்சாந்திரியா நகரத்தைவிட்டுத் துரத்தி அவனுடைய அக்கிரமத்தை அடக்க முயன்றார்கள். அதுகண்டு அரபிபாச்சா தன் சேனைகளைக்கொண்டு ஐரோப்பியர்க்கு முக்கியாதாரமான சுவேஸ் கால்வாய்க்கும் தீமைகள் விளைவிக்கப் புகுந்தமை நோக்கி அங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் அவ்வாய்க்கால் ஓரங்களில் பீரங்கிக் கப்பல்களை நிறுத்தி அதைக் காப்பதற்குவேண்டிய ஜாக்கிரதைகள் செய்துவந்தனர்.

இந்தியாவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் பற்பல சேனைகள் சென்று சுவேஸ்கால்வாய் முழுதும் அங்கங்கே பாசறையிறங்கி அந்தக் கப்பல்வழிக்கு எவ்விதமான அபாயமும் உண்டாகாதபடி காத்துக்கொண்டிருக்கின்றன. அச்சேனைகளுக்கு அதிபதியான ஸர் கார்னெட் ஊல்ஸ்லி என்பவர் தாம் கொண்ட மனவுறுதியைக் கைவிடாமலே எவ்விதத்திலாயினும் அத்தேசத்துக் கலகத்தை அடக்கவேண்டுமென்ற தீர்மானமுடையவராகி அத்தேசத்துப் படைகளை எதிர்த்துப்போய் நாளது செப்டெம்பர்மீ 15உ அரபிபாச்சாவைப் பிடித்துக்கொண்டார். ஆதலால் சுவேஸ் கால்வாயைப் பிடித்த பீடை இவ்வளவோடு ஒழிந்ததுமாத்திரமேயன்றி எகிப்துதேசத்துக் கலகமும் இவ்வளவோடே அடங்கிவிடுமென்றும், இதனால் ஐரோப்பா கண்டத்திலும் பெரிய ராஜ்யங்களில் சில மாதங்களாக உண்டாயிருந்த குழப்பமும் அமையாமையும் நீங்கிவிடுமென்றும் உறுதியாக நம்புகிறோம். இப்படி அரபிபாச்சாவை வென்று நமது தேசத்துக்கு உபயோகமான பெருங்கால்வாயை ரக்ஷித்தது பெரிய காரியமாகையாலும் இந்த ஜயத்தில் பாதி நமது தேசத்துப் படைகளால் அடையப்பட்டமையாலும், ஜயம்பெற்ற செய்தி வந்தவுடனே நமது கவர்னர் ஜனரல் அவர்கள் இத்தேசத்துக் கோட்டைகள் தோறும் பீரங்கிவெடி தீர்த்து ஜயபேரிகை அடிக்கக் கட்டளையிட்டனர்.

நன்மைபெறுவதற்குரிய நுட்பங்கள்.

அதிர்ஷ்டம் ஒருவர்பங்கல்லவாயினும் அதை ஏற்றுக்கொண்டு ஆளும் திறமையுடையோர்க்கல்லது மற்றவர்க்கு அது வாய்க்காது. இந்த நீதியை நினைவில் வைத்துக்கொண்டு நடப்போமாளுல், வருவது வழித்தங்காது, நமக்கு அதிர்ஷ்டம்வருவதானுல் தானே நம் மடியில் செல்வத்தைக்கொண்டு சொரியுமென்றெண்ணி ஒரு முயற்சியுமின்றி உட்காந்திருப்பது முற்றும் புத்தியீனமேயெனத் தெளிவாகும். 'வருந்தியழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமினென்ருற் போகா' என்றபடி நன்மையோ தீமையோ நமக்கு நேரவேண்டியகாலத்தில் நேர்ந்துதான் தீருமென்று எண்ணிச் செயலற்றுச் சும்மாயிருப்பது சரியன்று. அப்படி எண்ணியிருப்பவர்களைக் காரியசித்தியென்னப்பட்டது ஒருபோதும் கண்ணெடுத்துப் பாராது. எல்லாம் அவரவருடைய அதிர்ஷ்டப்படியே நடப்பவையென்ருலும், மனிதருடைய முயற்சியின்றி ஒருகாரியமும் நிறைவேருது.

ஜயம்பெறவேண்டுமென்று ஊக்கங்கொண்டவர்கட்கு இடையூறுசெய்வது ஒன்றுமில்லை. எந்தவிதத்திலாயினும் ஆரம்பித்த கருமத்தை முடித்தேதீரவேண்டுமென்ற மனவுறுதிகொண்டு விடா முயற்சியாய்ப் பாடுபடுவோமாளுல், அப்போது நாம் எதிர்பாராத விடங்களிலேகூட நமக்கு அநேகம் ஒத்தாசைகள் நேர்ந்துகொண்டேயிருக்கக் காண்போம். நம்முயற்சிகளெல்லாம் கைகூடாமல் நிராசையாகிய பெருங்கடலில் நாம் மூழ்கும்படி நேருகிற தருணத்தில் கருணைக்கடலான கடவுள் நமக்கு மறுபடியும் ஆசைகாட்டிக் கை கொடுப்பார். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் உண்டு: வித்தியாப்பியாசமே தனக்குத் தொழிலாகக்கொண்ட ஒரு வாலிபன் தன் உயிரையே ஒழித்துவிடவேண்டுமென்று தீர்மானங்கொண்டு தெருக்கள்தோறும் திரிந்துகொண்டிருந்தான். ஏனெனில் அவன் பலவிதமாய்க் கஷ்டநஷ்டங்களை அனுபவித்தும் விடாமுயற்சியாய் அவைகளை எதிர்த்துக்கொண்டு வெகுகாலம் மன்ருடினுன்; சிறிதும் பயன்படவில்லை. காரியம் ஒருதடவையும் கைகூடாமற்போனதுபற்றி இப்படி உயிர் வைத்திருப்பதைவிட விட்டுவிடுவதே மேலென நிச்சயிக்கலானுன். இவ்விதமான மனவிசாரத்தோடு அவன் மெல்லமெல்ல ஆற்றங்கரைக்குப் போகையில் நடுவழியே பெருமழை பொழியலாயிற்று. அதுகண்டு ஏதோ ஞாபகப்பிசகாய் அவன் மழை நிற்கட்டுமென்று அங்கிருந்த ஒரு மண்டபத்திலே போய்த் தங்கினுன். அவனைப்போலவே மழைக்கொதுங்கவந்த மற்ருெருவன் அம்மண்டபத்தில் அவன் பக்கத்தில் உட்காந்திருந்தான். அவர்கள் இருவருமாய் அங்கே

உட்காந்துகொண்டிருக்கையில், அவர்கள் தலைக்குநேராய் அம் மண்டபத்தின் மேற்கட்டடம் இடிந்து அங்கு உட்காந்திருந்த இரண் டாவது மனிதன்மேல் விழ அவன் இறந்துபோனான். தன் உயிரைத் தானே ஒழித்துவிடவேண்டுமென்று போன வாலிபனுக்குச் சிறிதும் அபாயமில்லை. அந்த ஆபத்தினின்றும் சுவாமி தன்னைக் காத்தருளி னது கண்டு, தன்னிடத்தில் கடவுள் கடாக்ஷம் வைக்கவில்லையென்று நினைத்து அவரை வெறுத்தது தன்னுடைய தெரியாமையேயென அவ னுக்கு உடனே தோன்றியது. அண்டையிலிருந்தவன் தலையில் இடி விழுந்திருக்கத் தனக்குமாத்திரம் ஒரு கெடுதியும் நேரிடாமல் காத்த ருளின கடவுள் தன்னை ஒருபோதும் கைவிடார் என்ற நம்பிக்கையும் தைரியமும் அடைந்தவனாகி அவன், இனி நாம் ஒருகாலும் முயற்சி யைக் கைவிடாமல் காரியசித்திபெறப் பாடுபடவேண்டும் என்று தீர்மானங்கொண்டு சந்தோஷமாகவே வீட்டுக்குச் சென்றான். பின்பு அவன் தன் ஆயுளளவும் ஒரு குறையுமில்லாமல் பெருமை யாகவே வாழ்ந்திருந்தான்.

“காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்” என்றபடி சாதாரணமான சமயமாயினும் ஒன்று தனக்கு எப்போது வாய்க்கப்போகிறதென்று எதிர்பார்த்திருந்து, நேருகிற தருணங்கண்டு விடாமல் அதைக் கைக் கொள்ளவேண்டும். அற்பமானவையென்று அவற்றைத் தள்ளிவிட் டுப் பெருத்த வியாபாரங்களே தமக்குக் கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்த்திருக்கலாகாது. ஏனெனில், அப்படிப்பட்ட தருணம் ஒரு காலும் வாய்க்காமலே போனாலும் போய்விடும். இதற்கும் ஒரு திருஷ்டாந்தமுண்டு: வாலிபன் ஒருவன் ஒரு வித்தியாசாலையில் வேதனமில்லாமல் சேர்ந்து படிக்கவேண்டுமென்று ஆவல்கொண்டு அதற்காகக் காலால் நடந்து நெடுங்காததூரம் சுற்றி அல்லாடினான். கடைசியில் தான் குறித்த ஒரு வித்தியாசாலைபோய்ச் சேர்ந்து அவ் வித்தியாசாலைத் தலைவருடன் தன் கதைகளையெல்லாம் எடுத்துரைத் துத் தன்னை ஒரு தருமவித்தியார்த்தியாகச் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டிக்கேட்டான். அந்தப் பாடசாலையில் இருக்கவேண்டிய தரும வித்தியார்த்திகளின் தொகை சரியாய் முன்னமே நிறைந்திருந்தது. அதிகமாய் ஒருவரைக்கூடச் சேர்த்துக்கொள்ள இடமில்லை. வித் தியாசாலைத்தலைவர் அச்செய்தியை வாயால் வெளிப்படையாகச் சொல்லத் துணியாமல், ஒரு பாத்திரத்தில் வழியவழியத் தண்ணீர் ஊற்றி வித்தியார்த்தியின் எதிரே காட்டினார். அச்சிறுவன் அதைக் கண்டவுடனே அக்குறிப்பின் கருத்தைத் தெளிவாய்த் தெரிந்து கொண்டு அதன்மேல் ஒன்றும் பதில்சொல்லத் தோன்றாமல் துக்கப் பட்டுக்கொண்டே திரும்பிப்போயினான். ஆயினும் சிறிதுதூரம் போகையில் அவனுடைய முகத்தில் ஒரு விகாஸம் தோன்றியது. உடனே குனிந்து தரையிலிருந்த உலர்ந்த சருகு ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு மறுபடியும் அவ்வித்தியாசாலைத் தலைவரிடம்

சென்று அந்தச் சருகை அவர் வைத்திருந்த பாத்திரத்துத் தண்ணீரிலே போட்டான். இந்த விசேஷச் செய்கையே அவனுடைய அதிர்ஷ்டகாலத்து ஏதுவாயிற்று. உடனே அவனை அந்த வித்தியாசாலையில் சேர்த்துக்கொண்டார்கள். இதனால், எவ்வளவு கொடிய விரோதமாகத் தோன்றினும், விடாமுயற்சியாய்ப் பாடுபடுகிறவர்களுடைய காரியங்களுக்கு எதுவும் இடையூறு செய்யாதென்பது தெளிவாகின்றது. மனிதர்கள் இறுவனா காறும் மனஞ்சோராது முயல்வதைக் காணும்போதுதான் கடவுளுக்கு அவர்களிடத்தில் கருணை அதிகமாய் உண்டாகின்றது.

காலத்தின் பெருமையைத் தக்கபடி கொண்டாடுவதும் நன்மை பெறுவதற்குரிய நுட்பங்களுள் ஒன்றும். சிலகாலம் கழிந்தபிறகு சென்ற காலத்தைத் திரும்பிப்பார்த்து நமது காலம் நன்றாகக் கழிந்ததென்று களிப்படைய விரும்புகிறவர்கள், தற்காலத்திலுள்ள ஒவ்வொரு நிமிஷத்தின் பெருமையையும் நன்றாகக் கண்டறிந்து, அவ்விதமான நிமிஷத்தில் சிறிதளவுகூட வீண்போகாமல் முற்றும் நல்விஷயத்திலேயே வினியோகிக்கும்படி முயலவேண்டும். போன நிமிஷம் பின்பு பல்லாண்டு தவமிருந்தாலும் திரும்பி வாராது. இருப்புப்பாதை வண்டியேறப்போகிறவன் உசிதகாலத்துக்கு ஒரு நிமிஷம் தவறிப்போவானாயின், போனது போனதுதான். ஒருவர்க்காயினும் காலம் காத்திராது. ஆதலால் நாம் ஒவ்வொரு நிமிஷத்தின் வரவையும் எதிர்பார்த்திருந்து அதனால் உண்டாகும் நன்மையைப்பெறக் கண்ணும்கருத்துமாயிருக்கவேண்டும். தாங்கள் சிந்தனைகொள்ளும்போது மனிதர்கள் அநேகமாய், ஒழிவிருந்தால், இதையும் செய்யலாம் அதையும் செய்யலாம் என்று சொல்வதுண்டு. ஒழிவுகாலத்தை வருந்தித் தேடிக் கண்டுபிடிக்க முயல்கிறவர்களுக்கல்லது மற்றவர்களுக்கு ஒருபோதும் ஒழிவு அகப்படாது. ஒரு வியாபாரத்தைச் செய்ய ஒழிவுகாலம் கண்டுபிடிக்க வேண்டுமென்ற அவசியமாவது ஆஸ்தையாவது இல்லாவிடின், தாங்கள் பாராமுகமாயிருந்த எந்தவிஷயத்துக்கும் மனிதர்கள் வேண்டியபடி சாக்குப் போக்குகள் தேடிச் சொல்லித் தங்களிடத்தில் குற்றமில்லையென்று மெய்ப்பிக்கமாட்டுவார்கள்.

உலகவியாபாரத்தில் புகும்போதே சிலர்க்கு அவர்கள் ஈடேறுவதற்கு வேண்டிய உதவிகளும் ஏதுக்களுமாகிய எல்லாம் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன: மிக்க வல்லவர்களாய் நன்னெறி பயிற்றுவிப்பதிலேயே நோக்கங்கொண்ட நேசர்கள் அநேகர் அவர்களைச் சூழ்ந்திருக்கின்றனர். இன்னும் அவர்கள் ஈடேறுவதற்கு வேண்டிய இதரமான உபபத்திகளும் சேர்ந்து, இவர்களுக்குக் காரியசித்தி உள்ளங்கை நெல்லிக்கனிபோலவேயென விசதப்படுத்துகின்றன. இவ்வளவிருந்தும் கடைசியில் அநேகர் ஆரம்பத்தில்

நின்ற நிலையிலேயே நிற்கின்றனர். அல்லது அவர்கள் சொல்லுகின்றபடியே தங்கள் துரதிர்ஷ்டத்தால் தங்களுக்கிருந்த நன்மைக்கு வித்தான நல்லாதரவுகள் அத்தனையும் நழுவவிட்டுப் பிறர் கைப் பிச்சையையே எதிர்பார்க்கும்படியான நிலைமைக்கு வந்துவிடுகின்றனர். இவ்வளவுக்கும் மேற்பார்வையாய்ப் பார்க்கும்போது அவர்களிடத்தில் எள்ளளவும் இழுக்குத் தோன்றாது. வீண் ஆடம்பரங்களில் அழித்துவிட்டானென்பதுமில்லை; வெளிக்கு வேலையை உபேக்ஷைசெய்தானென்பதுமில்லை, முதலில் பார்க்கும்போது இவ்விஷயம் மிகப் புதுமையாகவே தோன்றும். ஆயினும் இரண்டொரு நிமிஷம் நிதானித்து யோசிப்போமாயின், அதிர்ஷ்டமானது வேண்டிக்கொடுக்கவந்த நன்கொடையை வாங்கிக்கொள்ளத்தக்கக் கெட்டித்தனம் அவனிடத்தில் இல்லையெனவும், காலத்தின் பெருமையினிடத்தில் மதிப்பில்லையெனவும், வரவேண்டிய பாக்கியம் உண்டானால் தானேவரும் என்ற மூடநினைவே மேலாயிருக்கின்றதெனவும் தெளிவாகும்.

நன்மைபெறுவதற்குரிய நுட்பங்களுள் முக்கியமான மற்றொன்றுவது, நம்முடைய திறமையில் நாம் உறுதியான நம்பிக்கையுடையவர்களாயிருப்பதாம். நம்மை நாமே நம்பாமற்போவோமானால் அன்னியர்கள் நம்மிடத்தில் எப்படி நம்பிக்கைகொள்வார்கள்? தேர்ச்சி பெறுவதற்குரிய துணைக்கருவிகள் யாவும் ஒருவனுக்கு ஏற்றவண்ணம் அமைந்திருந்தும், தன் திறமையினிடத்திலேயே தனக்கு நம்பிக்கையில்லாமைபற்றி, ஆயுள் முழுதும் பிறந்தவடிவாயே இருப்பவர் அநேகர் உண்டு. மிகுந்த கூச்சமுடையவர்களும் வெளியே வந்து தங்கள் திறமையைக் காட்டவேண்டிய சமயங்களில் தைரியமில்லாமைபற்றி ஒன்றும் செய்யத்துணியாமல் சும்மா இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத் தங்களிடத்தில் நம்பிக்கையில்லாமை வரவர அதிகமாகிக் கடைசியில் ஒன்றுக்கும் உதவாதவர்களாகி விடுகிறார்கள்.

"தேடாதழிக்கிற் பாடாமுடியும்" என்பது மற்றொரு நுட்பமான நீதியாம். இந்த நீதியின் பெருமை நன்றாய்த் தெரிந்திருந்தாலும் அநேகர் அதை உபேக்ஷைசெய்து வரவுக்குமிஞ்சின செலவுசெய்ய ஆரம்பிக்கிறார்கள். கையிலுள்ள கருந்தனத்தை யுக்தாயுக்த விவேகமின்றி வீண்செலவு செய்வதைப்பார்க்கிலும் பெரும்பிழை வேறில்லை. செலவுசெய்ய அவசியமில்லாதவிஷயத்தில் ஒரு காசுகூடச் செலவழிக்கலாகாது; செலவுசெய்ய நல்லதருணம் வாய்த்தபோது அதற்கும் மயங்கலாகாது என்று ஒருவர் சொல்லுகிறார். ஆதலால் எல்லோரும் இதை மனதில் வைத்து ஏற்றவண்ணம் உசிதமாக மிதச்செலவு செய்துகொண்டுவருவதே முதன்மையான கடமையாம்.

நன்மைபெறுவதற்கு உரிய மற்றெரு நட்பமாவது ஏற்றகுண மமைந்த இல்லாளைப் பெற்றிருப்பதாம்.

"இல்லதெ னில்லவண் மாண்பாஞ லுள்ளதென்
இல்லவண் மாணுக் கடை" எனவும்,
"மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினு மில்" எனவும்,
"இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை" எனவும்

சொல்லியிருக்கின்றபடியே இல்லறத்தோர்க்குரிய எல்லாநன்மைகளும் இல்லாளைப்பற்றியே வருவனவாம்; அவ்வில்லாளும் குடித்தனத்தைச் செட்டுஞ்சீருமாய் நடத்திவரத்தக்க திறமையும் நற்குண நற்செய்கையும் உடையவளாயிருக்கவேண்டும். அப்படியின்றிக் கெட்டகுணங்கள் உடையவளாயிருப்பாளாயின், "அவ்வில் புலி கிடந்த தூறுய்விடும்" என்றபடி அவளால் குடித்தனமே கெட்டுப் போமாதலால் அப்படிப்பட்ட மனையாள் இருப்பதைவிட இன்மையே மேலெனத் தோன்றும். ஆனதுபற்றி முதலில் ஒரு பெண்ணை மனையாளாகக் கொள்ளும்போதே அப்பெண் பிறந்த குடிப்பெருமையையும் பெற்றோர்களுடைய குணுகுணங்களையும் பார்த்தே கொள்ளவேண்டும். தாயைப் பார்த்து மகளைக்கொள் என்கிறார்களல்லவா? ஆதலால் இவ்விஷயத்தில் எல்லோரும் அதிக கவனமாயிருக்கவேண்டும். முதலில் ஆலோசியாமல் பொல்லாத குணமுடைய பெண்ணைப் பெண்டாகக் கொள்வோமாயின், "தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்" என்றபடி பெருந்துன்பமுண்டாக்கி வதைக்கத்தக்க கூற்று அந்தப் பெண்ணைவிட வேறு வேண்டுவதில்லையாம். பெண்சாதி கெட்டால் புருஷனும் கெட்டான் என்றும் சொல்லுகிறார்கள்.

புருஷனுக்கு எல்லாப் பெருமைகளும் பெண்சாதியின் வழியாயே விளையவேண்டுமாதலால், தாதிபோலக் கணவனுக்குப் பாதப் பணிவிடைசெய்பவளும், அமைச்சன்போல் உசிதமறிந்து யுக்தியாலோசனைகள் உரைப்பவளும், கணவன் ஒருவேளை கோபித்துக் கடும்பேச்சுப்பேசினும் அதையும் அவர் அனுக்கிரகம்போலக் கொண்டு குளிர்ந்து பேசத்தக்க பொறுமையுடையவளும், தாய்க்குப் பின் தாரம் என்றபடி புருஷனை இனிய உணவுமுதலியவைகளால் உபசரித்துத் தாயைப்போலப் பாதுகாப்பவளும், கணவன் மனவிசாரமுற்றிருக்கும் காலங்களில் இனிய வார்த்தைகள் சொல்லித் தேற்றுகிறவளும், இன்னும் பலவகைகளால் எவ்விதத்திலும் எக்காலத்திலும் தன் காதலனுக்குக் களிப்பே உண்டாக்கும் உத்தமகுணங்கள் உள்ளவளுமான அகமுடையாளைப் பெற்றிருப்பவனுடைய பாக்கியமல்லவோ பாக்கியம்!

நன்மைபெறுவதற்குரிய நட்பங்கள் இவ்வளவுமாத்திரமேயல்ல; இன்னுமொன்றுண்டு: தங்களுக்கு எக்காலத்திலும் ஒரு

குறைவுமின்றிக் களிப்பும் சிரிப்புமாய்ச் சிறப்பாக வாழ்வதற்கு வேண்டிய நிறைசெல்வமுள்ளவர்கள் அநேகர் இருக்கின்றனர். ஆயினும் அவர்களுள் பலர் சற்று புன்னகைகொள்ளச் சிறுபொழுதுகூட ஒழிவில்லாமல் மேன்மேலும் திரவியம் சம்பாதிக்கவேண்டுமென்ற ஆவலே அதிகமாகி எப்போதும் உழைத்தவண்ணமாய் இருக்கின்றனர். "முயற்சி திருவினையாக்கும்" என்பதே அவர்களுடைய முதன்மையான கொள்கை. அக்கொள்கை எல்லோர்க்கும் இருக்கவேண்டுவது நியாயமே. ஆயின் செல்வமே மனிதர்களுக்குச் சவுக்கியமும் களிப்புமுண்டாக்க முதற்காரணமன்று என்பதை அவர்கள் ஒருபோதும் எண்ணுவதில்லைபோலும். தரித்திரத்தினால் எவ்வளவு துக்கம் உண்டோ, அதைப்பார்க்கப் பதின்மடங்கு துக்கமும் செல்வத்தினால் சம்பவிக்கக்கூடும். முதலில் செல்வம் தேடுவதும் துக்கமே, தேடினதைக் காப்பதும் துக்கமே, அதைத் தான் செலவழிப்பதும் துக்கமே, கைசோர்ந்துபோனாலும் துக்கமே. ஆதலின் அக்கிரமமாய்ப் பொருள்தேடி அவதிப்படுவதைப்பார்க்கிலும் தரித்திரத்தோடாயினும் உள்ளதைக்கொண்டு திருப்தியடைந்திருப்பது உத்தமமாம்.

ஆயின், ஒருவனுக்கு உயர்ந்த பதவிகிடைத்தால் அவன் இவ்வுலகவாழ்க்கையில் ஜயம்பெற்றவனா அல்லவா? எளியார்க்கெளியனாயிருந்து நல்வழியிலேயே பொருள்தேடித் தனவானானவனும், பேரூர் தெரியாதிருந்து மிகப் பிரசித்திபெற்றவனும் ஜயம்பெற்றவர்களா அல்லவா என்பீர்களோ? கடவுள் இவ்வுலகத்தில் நமக்கு அளித்திருக்கும் பெருங்கொடைகள் பலவற்றுள்ளும் முதன்மையான திருப்தியென்பது ஒன்று இல்லாவிடின் அவர்களும் ஜயம் பெறாதவர்களேயாம். ஒருவன் கீழ் ஆட்பட்டிராமல் யோக்கியனாகக் காலம்கழிப்பதற்கு வேண்டிய வழியைத் தேடிக்கொள்வதே முக்கியமாதலால், நமக்குப் பொருள் விசேஷமாகக் கிடைக்காமற்போனாலும், "செல்வமில்லாமற்போனாலும் சந்தோஷமடைந்திருக்கக்கூடும்; அதிர்ஷ்டமானது செல்வத்தைச் சேரவொட்டாமல் விலக்கினாலும், சந்தோஷத்தை ஒருபோதும் விலக்கமாட்டாது" என்பதை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, "தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை, அம்மா பெரிதென் றகமகிழ்க" என்றபடி எப்போதும் அகமகிழ்ந்துகொண்டே இருக்கக்கடவோம். அப்படி உள்ளதைக்கொண்டு திருப்தியடைந்து சந்தோஷமாய்ச் சோம்பலின்றி முயற்சிசெய்துகொண்டிருப்பவர்களுக்கு எப்போதும் எவ்விதமான குறையும் உண்டாவதில்லை.

குண்டூசியிற்கண்ட கருந்தனம்.

ஏறக்குறைய நூறுவருஷங்களுக்குமுன் ஒரு வாலிபன் பாரிஸ் நகரத்திற்கு வந்தான். அப்போது அவனுக்குப் பிராயம் இருபத் தொன்றிருக்கும். வெளித்தோற்றத்திலேயே அவன் ஒரு பட்டிக் காட்டானெனவும், வறுமையால் வருந்துகிறவனெனவும் விளங்கி யது. இராமுழுதும் ஓயாது நடந்துவந்தவனாகையால் அப்போது அவன் உடல் மெலிந்து மிகவும் இளைப்புற்றிருந்தான். மேலும் அன்றையதினம் காலைமுதல் அவனுக்குப் போஜனமே கிடைக்க வில்லை. அப்பொழுது அவ்வாலிபனைப் பார்க்கையில், முதலில் உணவுக்கு வேண்டியவழி தேடிக்கொண்டுதான் அவன் மற் றொரு வேலை பார்ப்பான் என்று எண்ணும்படியாயிருந்தது. ஆயி னும் அவன் கையில் ஒரு காசுகூடக் கிடையாமல் "திக்கற்றவர்க் குத் தெய்வமே துணை" என்று நம்பிவந்திருப்பதனால், உணவு தேடிக் கொள்ள அவனுக்கு யாதொரு வழியுமில்லை. ஆயின் மிகப் பிரசித்தி பெற்ற ஒரு பெரிய வர்த்தகனைக் காண்பதற்கு ஒரு கடிதம் மாத்தி ரம் அவன் கையிலிருந்தது. அவனிருக்கும் இடமோ அவ்வாலிப னுக்குத் தெரியாது. அதனால் எங்கெங்கேயோ தேடிப் பல பேர்களைக் கேட்டு விசாரித்துக் கடைசியில் அவ்விடத்தைக் கண்டுபிடித்தான். அந்தப் பெரிய மனிதனைக் கண்டு கடிதம் கொடுத்தபோது அவன் மனம் எப்படி அலைபாய்ந்ததோ? ஏனெனில், அவனுக்குள்ள ஆதர வெல்லாம் அக்கடிதமொன்றேயாகையால் அது அனுகூலப்படா விட்டால் அப்போதே அவன் உயிரையிழக்கவேண்டுவதுதான். அதிகாரி அக்கடிதத்தைப் பிரித்துப் படிக்கையில் அவன் முகக்களை எப்படி மாறுகிறதோவென்று அச்சிறுவன் அவன் முகத்திலேயே கண்வைத்துப் பார்த்திருந்தான். அதிகாரியோ அக்கடிதத்தைக் கடைசிவரையில் வெகு தீவிரமாய்ப் படித்துப்பார்த்து மனக்கவலை யுடன் மடித்துவிட்டு, என் வர்த்தகசாலையில் இப்போதிருக்கிற உத் தியோகஸ்தர்களே வேண்டுமளவிற்கு அதிகம். இன்னும் அதிக மாய்ச் சேர்த்துக்கொள்ள அவகாசமில்லையேயென விடைபகர்ந் தான்.

அவ்வாய்மொழியைக் கேட்டவுடனே அச்சிறுவன் மிகவும் திடனழிந்து துக்கமுற்றானாயினும், வாய்திறந்து ஒன்றும் பேசாம லே தலைவணங்கி அவ்விடம்விட்டு வெளியேபோகத் திரும்பினான். ஆயினும் இன்னவிடத்திற்குப் போகிறதென்று தோன்றாமல் மிகக் கவலையுற்றவனாயினான். ஆனால் இச்சிறுவனைப் பார்த்தவுடனே அவ்வதிகாரியினுள்ளத்தில்மாத்திரம் அவனைப்பற்றி ஏதோ கொஞ் சம் கருத்துத் தோன்றியிருந்தது. அவ்வெளிய பையன் அவ்வி

டம்விட்டு வெளியே போமளவும் அதிகாரி அவனையே பார்த்துக் கொண்டிருந்தான். அப்படி அவன் பார்த்திருந்ததற்கு யாதுகாரணமோ நாம் அறியோம். யாரோ ஒரு பேதைப் பையலென்று உதாசீனமாகவே பார்த்திருக்கலாம். அப்படியிருக்க வெளியே போன பையன் அங்கோரிடத்தில் குனிந்து ஏதோ ஒரு சிறு பொருளைத் தரையினின்று எடுத்துத் தன் உடையில் நாட்டிக்கொண்டான். அதைக் கண்டவுடனே அதுவரை அவனை உதாசீனமாய்ப் பார்த்திருந்த பெரிய மனிதன் அதிக கவனத்துடன் அவன்மேல் கண்வைக்கலானான். அவன் கண்டெடுத்த பொருள் என்னென்று நினைக்கிறீர்கள்? அது ஒரு சிறிய குண்டூசியேயொழிய வேறல்ல. பேதைகள் பூமியில் வீழ்ந்துகிடக்கும் குண்டூசிபோன்ற அற்பப்பொருள்களைப் பொறுக்கியெடுப்பது சாதாரணமே; அது அத்தனையாகக் கவனிக்கத்தக்கதுமல்லவே என்பீர்களோ? மேல்பார்வைக்கு அது அத்தனை அற்பமாகத் தோன்றினும் அச்செய்கையானது ஒருவர்க்கு நற்குண நற்செய்கைகளில் இயற்கையாகவே ஆஸ்தையுண்டென்பதைக் குறிப்பிக்கின்ற• பெருங்குறிகளுள் ஒன்றென அந்த வியாபாரி கண்டறிந்தான். அதாவது, பொருள்களிடத்தில் செட்டும் சீருமாய் இருப்பானென்பதை இச்செயல் விளக்குகின்றதெனத் தெரிந்து, அதிகாரி அச்சிறுவனிடத்தில் அன்புகூர்ந்து, போன பையனைத் திரும்பியும் வரவழைத்து, மிகப் பெரியதான தன் காசுக்கடையில் எளியதொழிலொன்று செய்யும் தொழிலாளியாய் அவனை ஏற்படுத்தினான்.

அச்சிறுவனுக்கு ஜாக்ஸ் லப்பீட்டு என்று பெயர். அவனுடைய தகப்பன் கூலிவேலைசெய்து வயிறுவளர்க்கும் எளிய கம்மாளன். அவனுக்கு இந்த லப்பீட்டோடுகூடப் பத்துபிள்ளைகள். லப்பீட்டு காணப்போன காசுக்கடைக்காரனே மிகப் பிரசித்திபெற்ற அரசிறைக்கணக்கனும் பாரிஸ்நகரத்திலுள்ள சிறந்த தனிகர்களுள் ஒருவனுமாம். இச்சிறு கதையைப் பலதரம் கேட்கப் பிரஞ்சுதேசத்தார் பேராவல்கொண்டவர்கள். அதற்கேற்றபடியே இக்கதையும் திரும்பித் திரும்பிப் பலதரம் சொல்லக்கேட்கத்தக்கதுதான். இச்சமயத்தில் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டியது ஒன்று உண்டு. ஜாக்ஸ் லப்பீட்டினுடைய நடை உடைகளிருக்கட்டும்; அவனுடைய பிரகிருதியே பெருந்துணையாக நின்று அவனுக்குச் சகாயம்செய்தது. பிரகிருதிக்கு உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேற்றுமை கிடையாதல்லவா? வெகு சுந்தரமான முகமும், தனக்கு முக்கியாதாரமாக நினைத்திருந்த காரியம் கைகூடாமற்போன அக்காலத்திலும் மாறுபடாத பராதீனத்தை யெதிர்பாராப் பெருந்தன்மையும், மிகத் தெளிவான வாய்மொழியும், கபடமற்ற காட்சியுமாகிய இவைகள் லப்பீட்டினுடைய வடிவத்தில் விளங்கியதனால், அவற்றைக் கண்டே அந்தப் பிரபுவுக்கு, பொருள்களினிடத்தில் மிகுகருத்துடைமையை விளக்குவதான அச்சிறுசெய்கையையும் கவனமாய் உற்றுப்பார்க்

கப் போதுமான அன்பு அவனிடத்தில் உண்டாயிற்று. அவனே அவ்வுத்தியோகத்தில் நியமித்த சில தினங்களுக்குள்ளேயே அவ்வதிகாரத்தை ஆளும்படியான திறமைகள் அவனிடத்தில் அதிகமாயிருக்கின்றனவென அதிகாரிக்கு வெளிப்படையாகத் தோன்றியது. லப்பீட்டினுடைய யுத்திபுத்தி சாமர்த்தியங்களை அவனுடைய காரியங்களில் காணவே யஜமானனுக்கு அவனிடத்தில் அதிக சந்தோஷமுண்டாயிற்று. வாஸ்தவத்தை யோசிக்குமளவில், லப்பீட்டு தானாகவே இங்குமங்கும் சிற்சிலவாய்ச் சில விஷயங்கள் தெரிந்துகொண்டானேயொழிய மற்றப்படி அவன் ஓரிடத்திலும் கிரமமாய்க் கல்விகற்றவனல்லன்; வேலைசெய்த கைப்பழக்கமும் விசேஷமாய்க் கிடையாது; ஸ்வக்கிராமத்திலே ஒரு உத்தியோகசாலையில் கூலிவேலைக்காரனுக்குப் பதிலியாயிருந்தான் என்பது ஒன்றுதான். ஆயினும் அப்படி வேலைசெய்யப் புகுந்தது, எவ்விதத்திலாவது பொருள்சேர்த்துத் தான் தனிகனாகவேண்டுமென்ற பொருளாசையாலல்ல, அப்படி உலகத்தாரெவரும் மதிக்கும்படியான வல்லமை தன்னிடத்தில் விசேஷமாய் இருக்கிறதென்று கண்டு அதனாலுமல்ல; பின்னென்னவெனில், நமக்கு ஸ்வாமி ஏதோ சிறிது சக்தி கொடுத்திருக்க அதை வீணிற்கழிப்பது உசிதமல்லவெனத் தெரிந்து அத்திறமையை அனுபவத்தில் காட்டவேண்டுமென்ற கருத்தினாலேதான்.

ஜாக்ஸ் லப்பீட்டு அந்தப் புதிய உத்தியோகத்தை ஏற்றுக்கொண்ட சில தினங்களுக்குள்ளேயே முன் குண்டூசியைக் கருத்தாய்க் கண்டெடுத்த குணம் மாத்திரமேயன்றிப் பலவகைப்பட்ட உத்தம குணங்களும் அவனிடத்தில் உளவெனத் தெளிவாயிற்று. முன் அவனுடைய வடிவத்தைக் கண்டு அதிகாரி உத்தேசித்தபடியே லப்பீட்டு தனக்கு ஏற்பட்ட காரியங்களைக் கண்ணுங்கருத்துமாய்க் காத்துவந்தான். அதுவும் தன் மனம்போனபடியல்ல; மனதை யடக்கி அதது செய்யவேண்டிய விதிப்படியே செய்யலானான். தன் புத்திக்குத் தோன்றியதே சரியென்ற பிடிவாதம் அவனுக்கு ஒரு போதும் இல்லை;

> "நாண் பெரியோமல்லோ நா நன்றுந் தீது
> நமக்குரைப்பாருளரென்று நாடினோமே"

என மேலோருரைத்தபடி பிறர் ஏதாவது நன்மை தீமைகள் எடுத்துரைத்தால் அவற்றையும் உசிதமென்று ஏற்றுக்கொள்ளும் உத்தம குணமுடையவன். ஆனதுபற்றி அவன் ஆலோசனையில்மாத்திரமேயல்ல; காரியங்களைத் தானே ஆய்ந்தோய்ந்து பார்த்துக் கிரமப்படி நடத்துவதிலும் மிக்க வல்லவனென யஜமானனுக்குத் தெளிவாகத் தெரியவந்தது. அதனால் லப்பீட்டு வெகு சீக்கிரமே அந்த வர்த்தக சாலையிலுள்ள கணக்குப் புத்தகங்களுக்கெல்லாம் விசாரணைத்தலைவ

னுக நியமிக்கப்பட்டான். நாளுக்குநாள் அவனுடைய யோக்கியதையும் திறமையும் வெளிப்படையாயின. அவ்வண்ணமே யஜமானனுக்கு அவனிடத்தில் நாளுக்குநாள் நம்பிக்கையும் அதிகமாகி வந்தது. பின்பு அவன் அவ்வுத்தியோகத்திலிருந்து படிப்படியாய் உயர்ந்து மிகவும் உத்தரவாதமான பொக்கிஷதாரர் உத்தியோகம் பெற்ருன். அவ்வண்ணமே நடந்துவந்து நாளாவர்த்தியில் அந்த வர்த்தகசாலேயில் லப்பீட்டு ஒரு பாகஸ்தனுகிக் கடைசியில் அந்த யஜமானன் இறந்துபோனபிறகு தானே காரியங்களே விசாரிப்பவனுகவும், அந்த சாலேக்குத் தலேவனுகவும் ஏற்பட்டான். பின்பு 'லப்பீட் அண்டு கம்பெனி' என ஒரு வர்த்தகசாலே ஏற்பட்டது. லப்பீட்டு தன்னுடைய நன்றி மறவாமைக்காக இறந்துபோன தன் யஜமானனுடைய மகனுக்கு அந்த வர்த்தகசாலேயிலிருந்து தீர்வைகொடுத்துவந்தான். இவ்வண்ணம் கீழே கிடந்த குண்டூசியைக் கண்டெடுத்த காரணத்தால் ஒருவனுக்கு இவ்வளவு பாக்கியம் கிடைத்ததென்ருல், சிக்கனமென்பதைச் சிறிதும் கவனியாமல் அநேகர் எதையும் வீணேயிழந்து அல்லாடுவது என்ன புத்தியீனமோ?

மன்னுயிர் குடும்பவாழ்க்கை.

நாம் இப்பூமியில் தோன்றுகிற நாள்முதல் நம் ஆயுள்முடிவுவரையில் நமது வீட்டிலேயே நிலேயாக வசித்திருந்து நம் உற்ருருறவினர் அனேவருடனும்கூடி ஒருவர்க்கொருவர் செய்யவேண்டிய கடமைகளேத் தப்பாமல் சரியாய்ச் செய்துகொண்டுவருவோமானுல், அப்போது இவ்வுலகம் நமக்கு ஏற்றவசதியாகவேயிருக்கும். ஆயினும் யோசிக்குமளவில், அப்படியிருப்பது எவர்க்கும் இன்பந்தருவதாகாது. ஏனெனில், நாம் நமது வீட்டிலேயே சுகித்திருக்கவேண்டுமென்ருல், நம்முடைய சுகதுக்கங்களுக்கு பாத்தியஸ்தர்களான பந்துமித்திரர்கள் அனேவரையும், வாழ்நாளில் நாம் விரும்பத்தக்க விதம்விதமான வஸ்துக்களேயும் நமது வீட்டுக்குள்ளேயே சேர்த்துவைத்துக்கொள்ளவேண்டுமல்லவா? அப்படிச் செய்தால் அப்போது நமக்கு இன்பந்தருவதான இல்லமே கொடிய சிறைச்சாலேக்கொப்பாகும். ஏனெனில், நாம் கருதத்தக்க நம் குடும்பமானது தாய்தந்தை, அண்ணன்தம்பி, அக்காள் தங்கை முதலிய சொற்பமனிதரோடுமாத்திரமே முடிவுபெறுவதில்லே. இவ்வுலகத்திலுள்ள மனிதஜாதியாரெல்லாரு முள்ளிட்ட ஒரு பெரும் குடும்பமாயிருக்கின்றது. அதெப்படியென்பீர்களோ கேளுங்கள்:

நம்முள் அநேகர்க்குச் சமீபத்திலேயே உறவினர்களும் நேசர்க

ளும் அண்டையயல்வீட்டுக்காரர்களுமாய்ப் பலர் இருக்கிறார்கள். அவர்கட்கும் நமக்கும் போக்குவரவுகள் விசேஷித்திருப்பதோடு கூட, நம்முடைய சுகதுக்கங்களைப்போலவே அவர்களுடைய சுக துக்கங்களுக்கும் நாம் அதிகமாக பாத்தியப்பட்டிருக்கிறோம். இவ் வண்ணமே நமக்கு வேண்டியவர்கள் அநேகர் நம்மைவிட்டுப் பிரிந்து நெடுந்தூரத்திலே வசித்துக்கொண்டிருக்கின்றனராயினும், அவர்களுடைய மனதுமட்டும் எப்போதும் நம்மை நெருங்கியே இருக்கின்றது. அவர்களிடத்தினின்றும் அடிக்கடி நமக்கு யோக க்ஷேமங்களை விளக்கும் கடிதங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. இவ்வண்ணம் நாம் பிறந்த ஊரைவிட்டு அப்புறம்போகாமல் வீட் டிலேயே வசித்துக்கொண்டிருந்தாலும், நாம் ஒருபோதும் காணாத தேசங்களில் வசிப்பவர்களோடு நம் மனதுமாத்திரம்நெருங்கி நேசங் கொண்டிருக்கின்றது. அநேகம் காததூரம் ஒதுங்கியிருந்தாலும் அவர்களிடம் நம்மனம் ஓடுவதை அந்தத் தூரம் ஒருபோதும் விலக்க மாட்டாது. அவர்களிடத்தில் அன்புகூர்வதையும் அகற்றமாட்டாது. இவ்வுலகவாழ்க்கைக்குரிய இன்றியமையாமையே, இப்பூமண்டலத் தில் ஒரு புறத்திலுள்ள ஜனங்கள் மற்றொரு புறத்திலுள்ள ஜனங் களைப்பற்றிக் கவலைகொள்ளவும், அவர்களுக்காக வருந்தியுழைக் கவும் தூண்டிவிடுகின்றது.

முதலில் உணவு நமக்கு எப்படிக் கிடைக்கின்றது? இவ்வுலகில் எப்புறத்திலுமுள்ள லக்ஷோபலக்ஷம் பிரஜைகளும் பலவிதமாய் முயன்று உழைப்பதனாலேதான் அது நமக்குக் கிடைக்கின்றது. சமையற்காரன் சோறு சமைத்தளிக்கிறானென்கிறீர்களோ? பாசகன் சமைப்பதற்குமுன் திரளான ஜனங்கள் அதற்காக உழைத்துப் பாடுபட்டிருக்கவேண்டும். முதலில் நாட்டார் உழுது பயிரிட் டாலல்லவோ சமையனுக்குத் தானியம் கிடைக்கும். அந்நாட்டா ருக்கும் உழவுத்தொழில் எளிதில் முடிவதில்லை. கலப்பைமுதலிய உழுகருவிகளெல்லாம் அநேகம் கம்மாளர்கள் கூடிக் கைத்தொழில் செய்து சித்தப்படுத்திவைக்கவேண்டும். அவ்வுழுகருவிகளுக்கு வேண்டிய இரும்பு எங்கிருந்து கிடைத்தது? பல்லாயிரம் பிர ஜைகள் இருப்புக்கனிகளில் வேலைசெய்து வெட்டியெடுக்கிறார்கள். அவ்விரும்பை உருக்கியெடுப்பதுமுதலிய வேலைகளுக்கு வேண்டிய நிலக்கரிகளைப் பதினாயிரம் பிரஜைகள் வேலைசெய்து வெட்டியெடுக் கிறார்கள். இன்னும் இதரமான கருவிகளையும் அநேகர் தேடிக்கொ டுக்கிறார்கள். சமைப்பதற்குவேண்டிய பாண்டங்களெல்லாம் குய வனால் வனைக்கப்படுகின்றன. அடுப்பெரிப்பதற்கு வேண்டிய கட் டைமுதலியவைகளை அநேகர் வெட்டிக்கொண்டு வருகிறார்கள். இவ்வண்ணம் உணவு நமக்குக் கைக்கு எட்டி வாய்க்கு எட்ட எண்ணிறந்தவிதமான எத்தனையோ வேலைக்காரர்கள் தமது புத்தியி னாலும் கையினாலும் பாடுபடவேண்டும்.

நமக்கு உணவு கிடைப்பதற்காக இத்தனை வருத்தமேன்? நாமே பாடுபட்டுப் பயிரிட்டுப் புசிக்கக்கூடாதாவென்று கேட்பீர்களோ? இவ்வுலகில் போஷிக்கப்படத்தக்க பிரஜைகள் சொற்பமாயிருக்குமாயின், சிலர் அப்படியே செய்யலாம். அப்படியின்றி அநேகமாயிரம் கோடி பிரஜைகள் அதனுல் ஜீவிக்கவேண்டியிருப்பதால் கூடியவரையில் அது சுலபமாயும் நயமாயும் கிடைக்கத்தக்கதாய் இருக்கவேண்டும். ஆதியில் கரி வெட்டியெடுப்பதுமுதற்கொண்டு எல்லாப் பிரயாசைகளையும் ஒருவனே பட்டுக்கொண்டு ஜீவனம்தேடுவது ஒருபோதும் எளிதில் முடியாது. ஒருவர்க்கொருவர் ஒத்தாசையாகத் தலைக்கொருதொழிலாய்ப் பாகித்துக்கொண்டு பல ஜாதி ஜனங்களும் கூட்டாகப் பாடுபட்டு வருவதனுல் ஜீவனம் எல்லோருக்கும் கூடியவரையில் சுலபமாய்க் கிடைக்கின்றது.

நாம் ஜீவித்திருப்பதற்கு முக்கியாதாரமான தானியவகைகள் மாத்திரமேயல்ல; அதற்கு இன்றியமையாத் துணையான உப்பு பயிரிட்டு வருவதற்கு எத்தனைபேர் உழைக்கவேண்டும்? சர்க்கரை சேர்த்துக்கொண்டு எந்தப் பதார்த்தத்தையும் இனிப்பாய்ப் புசிக்கிறுேமே. அதற்கு முதலில் கரும்புநட்டுப் பயிராக்கி ஆலையாடிச் சர்க்கரை காய்ச்சியெடுக்க எத்தனைபேர் எவ்வளவு காலம் வருந்தவேண்டும். நமக்கு உடைகள் கிடைப்பதும் இப்படியே. பருத்தி பயிரிட்டுப் பஞ்செடுத்துப் பதப்படுத்தி நூல்நூற்று ஆடைகள் நெய்யவேண்டும். இவற்றுள் அநேகம் சாமான்கள் தேசாந்தரங்களில் உற்பத்தியாகின்றன. அவற்றைத் தரைவழியாயும் கடல்வழியாயும் நமது தேசத்துக்குக் கொண்டுவருவது எவ்வளவு கடினமான காரியம்? சுதேசத்திலும் தேசாந்தரங்களிலுமுள்ள பல ஜனங்களும் இவ்வண்ணம் உதவிசெய்வது அற்றுப்போமானுல் அந்த நிமிஷமே நாம் நிர்வாணமாய்க் காட்டு மிருகங்களைப்போலவேதான் அல்லாடித் திரியவேண்டும்.

இவ்வகை நெடுந்தூரத்திலிருந்து நம்முடைய நல்வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை அழைப்பிக்கவும், தேசாந்தரங்களிலுள்ள நம் உற்றுருறவினர்களுடைய யோகக்ஷேமங்களை அறியவும் அவசியமாய் நேர்ந்தது காரணமாகத் தரையின்மீதும் கடலின்மீதும் ஜனங்களும் சாமான்களும் சமாசாரங்களும் சஞ்சரிப்பதற்குரிய கருவிகள் கண்டுபிடிக்கும்படியாயிற்று. அவ்வண்ணமே தரைப்பாதைகளும், இருப்புப்பாதைகளும், கப்பல்களும், தந்திதபால்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அதனுல் இப்போது, மனிதர்கள் ஒருவர்க்கொருவர் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் யோகக்ஷேமங்களை எளிதில் அறிந்துகொள்ளவும், சாமான்களையும் சமாசாரங்களையும், சமாசார பத்திரிகைகளையும், இன்னும் இவை போன்ற புத்தகம்முதலிய எவ்விதமான பொருள்களையும் ஓரிடத்

திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பவும் எவ்விதமான தடையும் இல்லாதிருக்கின்றது.

நீங்கள் மிக்கவல்லமையும் அதற்கேற்ற சூக்ஷ்மதிருஷ்டியுமுடைய வராகி, விமானத்தின்மீதேறி ஆகாயத்தில் அதிக உன்னத பிரதேசத்திலேபோய் நின்று இவ்விந்துதேசத்தையாவது, அல்லது இங்கிலாந்துமுதலாய்க் கைத்தொழில்கள் அதிகமாக நடந்தேறுகிற மற்றெந்தத் தேசத்தையாவது பார்க்கக்கூடியதாயிருந்தால், பலகோடி நூறாயிரம் பிரஜைகள் பற்பல திசையை நோக்கி ஒய்ச்சல் ஒழிவின்றிப் பாதசாரிகளாகச் சஞ்சரித்துக்கொண்டிருக்கவும், பல பதினாயிரம்பேர் மூலைக்குமூலை ஒடுகின்ற இருப்புப்பாதைவண்டிகளிலேறி ஒய்யாரமாய்ப் போகவும், கோடானுகோடி ஜனங்கள் குதிரைகளிலும் குதிரைவண்டிகளிலுமேறிச் சவாரிசெய்யவும், எண்ணிறந்த ஜனங்கள் எறும்புக்கூட்டம்போலப் பெரிய பட்டணங்களில் மொய்த்துக்கொண்டு தங்கள் தங்கள் வேலையில் கண்ணுற்றிருக்கவும் காண்பீர்கள்.

அந்தப் பிரஜைகளெல்லாம் எங்கே போகிறார்களென்று சற்று நிதானித்துப் பார்ப்போமானால், சிலர் தம் சிநேகிதர்களையோ சுற்றத்தாரையோ அல்லது தம் இருப்பிடத்தையோ தேடிக்கொண்டு போவதாகவும், சிலர் தாம் வேலைசெய்யும் அதிகாரிகளைத் தேடிக்கொண்டுபோவதாகவும், சிலர் தோட்டந்துரவுகளிலும் தொழிற்சாலைகளிலுமுள்ள தம் தொழிலாளிகளைத் தேடிக்கொண்டுபோவதாகவும், இவ்வண்ணமே ஏறக்குறைய எல்லாப் பிரஜைகளும் நேசத்தைப்பற்றியாவது அன்பைப்பற்றியாவது லாபத்தைப்பற்றியாவது கடமையைப்பற்றியாவது காரியவசத்தைப்பற்றியாவது தம்மோடு சம்பந்தப்பட்டிருப்பவர்களையே தேடிப்போவதாகவும் தெரியவரும்.

இருப்புப்பாதை வண்டிகள் ஜனங்களைத்தவிர இன்னும் எவற்றை ஏற்றிக்கொண்டுபோகின்றன? தினந்தோறும் அநேகமாயிரம் தபால் கடிதங்களைத் தூக்கிக்கொண்டு போகின்றன. இத்தேசத்தில் தபால் கொண்டுகொடுக்கும் சேவகர்களுக்குத் தெரியாத வீடு ஒன்று கூடக் கிடையாது. எவ்வளவு சிறுகுடிசையாயினும், மிகச் சிறிய குப்பத்திலுள்ளதாயினும் அதுவும் அவர்களுக்குத் தெரியும். அவ்வீட்டிலுள்ளவர்களுடைய யோகக்ஷேமங்களைப்பற்றித் தேசாந்தரங்களிலுள்ள அவர்களுடைய நேசர்கள் அடிக்கடி எழுதும் கடிதங்களைத் தபால் சேவகன் அவ்வீட்டிற்கே கொண்டு சேர்ப்பான்.

அப்படிவருகின்ற தாபால் கடிதங்களையெல்லாம் நாம் பிரித்துப் பார்க்கக்கூடுமானால், அவற்றுள் அநேகம் கடிதங்கள் சந்தோஷ சமாசாரங்களும், க்ஷேமவிசாரணைகளும், நல்ல கோரிக்கைகளும், கவுரவப்பேச்சுகளுமாயிருக்கும்; பல கடிதங்கள் வர்த்தகவியாபாரங்களுக்கு வேண்டிய உத்தரவுகளாயிருக்கும்; பின்னும் பல கடிதங்கள் பிறர்க்குச் செய்திகளைத் தெரியச்சொல்வதாயாவதிருக்கும், தாம்

தெரிந்துகொள்ளக் கேட்பதாயாவதிருக்கும்; இன்னும் பல பிறர்க்கு உதவிசெய்வதாயாவது இருக்கும்; தாம் பிறரிடத்தில் உதவி கேட்பதாயாவதிருக்கும். இவ்வண்ணம் ஆகாயத்திலேறிப் பார்ப்பதனல், நாமெல்லாம் இவ்வுலகில் எப்படி ஆடிக்கொண்டிருக்கிருேமென்பதும், கண்ணுக்குத் தோன்ருத கயிறுபோன்ற உள்ளன்பினுலும் இன்றியமையாலும் நாமெல்லோரும் எப்படி ஒன்ருய்க் கட்டுண்டிருக்கிருேமென்பதும் தெளிவாய்த் தெரியவரும்.

நமது தேசத்து வண்டி வழிகளும் இருப்புப் பாதைகளும் ஆறுகளும் கால்களும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்து இத்தேசத்தின் எந்தப் பாகத்தையும் ஒன்ருய்க் கூட்டியிருப்பதுபோலவேதான் நாநாதேசத்து இருப்புப்பாதைகளும் கடல்மார்க்கங்களும் ஒன்ருய்க் கூடி இப்பூமண்டலத்திலுள்ள நாகரிகம்பெற்ற நாடுகளையெல்லாம் மிகவும் விசேஷமாகப் பிணைத்திருக்கின்றன. அதன்மூலமாய் எத்தேசத்து ஜனங்களும் அவர்களுடைய அபிப்பிராயங்களும் ஒருபோதும் ஓயாமல் எங்கும் ஓடிச் சுற்றிக்கொண்டேயிருக்கிருர்கள்.

நன்மையாயினும் தீமையாயினும் ஓரிடத்தில் செய்யப்படுமாஞல் அது பிறவிடங்களிலும் நன்மையையோ தீமையையோ உண்டாக்குகின்றதென்பதும், உபயோகமான ஒரு விஷயம் ஓரிடத்தில் புதிதாய்க் கண்டுபிடிக்கப்படுமாயின், அது தேச முழுமைக்கும் எவ்விதமாக நன்மையுண்டாக்குகின்றதென்பதும், உழைப்பாளிகளும், உண்மைதவருதவர்களும், உபகாரிகளுமாய் ஒரு தேசத்திலுள்ள ஜனங்கள் எல்லாத் தேசங்களிலும் எல்லாவிஷயங்களும் எற்றவண்ணம் நடந்துவருவதற்கு எவ்வண்ணம் ஆதாரமாகிருர்களென்பதும், நல்லோன் ஒருவன் செய்யும் நற்செய்கை நெடுந்தூரத்திலுள்ள தேசங்களிலும் எவ்வண்ணம் உணரப்படுகின்றதென்பதும் இதனுல் எளிதில் அறிந்துகொள்ளக்கூடுமல்லவா?

உலகத்தில் இந்த வியாபாரங்களெல்லாம் எப்போதும் இடையூறின்றிச் சரியாகவே நடந்துவருவதற்காக, ஜனங்களெல்லாம் ஒருவர்க்கொருவர் அபிமானமும் உபகாரசிந்தையும் உடையவர்களாயிருக்கவேண்டுமென்றும், சத்தியமும் நாணயமும் தவருதிருக்கவேண்டுமென்றும், இதனுல் விசதமாகின்றது. நெடுந்தூரத்திலிருந்து நேசர்களுடைய நற்கருத்துக்களைக் கொண்டுவருகிற கடிதங்களுக்கு ஒத்த உத்தரமான இனியமொழிகள் உடனே போகாதிருக்குமாயின், எத்தனையோபேர்க்கு அதிகமான வருத்தம் உண்டாகும். ஒத்தாசைசெய்யவும் செய்திகள் தெரிவிக்கவும் "வேண்டுமென்று எழுதிய கடிதங்களுக்குப் பதில்கடிதங்கள் போகாதிருக்குமாயின், காரியக்கேடும் கஷ்டமும் உண்டாகும். நாணயமாக வேலைகளை நடத்தத் தகுந்த யோக்கியர்கள் அகப்படாமைபற்றி இருப்புப் பாதை வண்டி, கப்பல், தபால் முதலியவைகளை நம்பி ஒருவரும் கைக்கொள்ளக் கூடாதிருக்குமாயின், உடனே உலகமுழுதும் மிகக்

கலக்கமுண்டாகிக் கிரமமாக நடந்தேறிவரும் எல்லாக் காரியங்களும் நின்று போக்குவரவுகளும் தடைப்பட்டு, அனைவர்க்கும் பொருட்சேதமுண்டாவதுமாத்திரமேயன்றி வீணே காலங்கழிக்கும்படியாகிச் சவுக்கியத்துக்கும் அழிவுண்டாகும்.

பெருங்காற்றுமழைகள் வண்டிகளின் போக்குக்கு எப்படி தடைபண்ணுமோ, பெரும்புசலானது கப்பல்களை எப்படி மூழ்கப்பண்ணுமோ; அவ்விதமாகவே, பிரஜைகள் ஒருவர்க்கொருவர் நேசமும் நம்பிக்கையும் அற்றவர்களாகிக் கிரமமாய் உண்மையாக உழைக்காமற் போவார்களானல், அது உலகத்தார் அனைவர்க்கும் ஆபத்து விளைவிப்பதாகும். அப்போது எங்கும் எவரும் பிழைக்க வழியற்று மிகத் துன்பமடைவார்கள்.

நாம் கருதிக் கவலைகொள்ளத்தக்க நம்முடைய குடும்பமானது உற்றூருறவினரும் நேசர்களுமாகிய சில மனிதர்கள்மாத்திரமே அடங்கியதல்ல; உலகத்திலுள்ள மனிதஜாதியாரனைவரும் அடங்கப்பெற்ற மிகப் பெரிய குடும்பமாம் என்பது இதனல் தெளிவாகின்றதல்லவா? ஆதலால் அதற்கு நாம் செய்யவேண்டிய கடமைகளை எப்போதும் தவருது செய்துவரக்கடவோம்.

கல்விகற்கக் காலநியதியுண்டோ?

"கல்விகற்க ஒருபொழுதும் சமயம் தப்பிப்போவதில்லை" எனும் சாதாரண மொழி உண்மையென்பதை ஒப்புவிப்பதற்குத் திருஷ்டாந்தமாய் எடுத்துக்காட்டத்தக்க மஹா பிரதாபர்களுடைய சரித்திரம் பல உண்டு. பருவமுதிர்ந்தவர்களும் ஒருவேலையைத் தொடங்க மனவுறுதிகொள்வார்களானல் அதை நன்ருக சாதிக்கமாட்டுவார்கள். ஸ்ரீ ஹென்ரி ஸ்பெல்மன் ஐம்பதறுபது வயதாமளவும் சாஸ்திரம் கற்கத் தொடங்கவில்லை. ப்ராங்க்லின் பதார்த்த சாஸ்திரப் பயிற்சியில் நன்ருய்ப் பிரவேசிக்கும்பொழுது அவருக்குப் பருவம் ஐம்பதாகிவிட்டது. ட்ரைடெனும் ஸ்காட்டும் நாற்பது வயதிற்குமுன் கிரந்தகர்த்தாவென்று பெயரெடுக்கவில்லை. பொகாக்ஷோ என்பவர் கல்விகற்கத் தொடங்கியது முப்பத்தைந்து வயதில். அல்பீரி என்பவர் க்ரீக்பாஷை பயிலத்தொடங்கியபொழுது அவர்க்கு வயது நாற்பத்தாறு. ஆர்னல்ட் பண்டிதர் நீபர் எனும் கிரந்தத்தை மூலபாஷையில் வாசிக்கும்பொருட்டுப் பருவம் சாய்ந்தபின் ஜர்மானியபாஷை பயின்ருர். இவ்வாறே ஜேம்ஸ் உவாட்டும் நாற்பது வயதில் க்ளாஸ்கோ நகரத்தில் தொழிற்கருவி செய்துவரும்பொழுது ப்ரான்சுபாஷை, ஜர்மானியபாஷை, இத்தாலியபாஷை இவை

களில் உள்ள அருமையான யந்திரதத்துவ வித்தியாகிரந்தங்களை வாசிக்கும்பொருட்டு அம்மூன்று பாஷைகளையும் கற்றார். ஹீப்ரூ பாஷை வாசிக்கத் தொடங்குமுன்னே தோமாஸ் ஸ்காட்டுக்கு வயது ஐம்பத்தாறாகிவிட்டது. மில்த்தன், டாந்தி என்னும் இரண்டு கவிவல்லோனாயும் மெக்காலே இணையிட்டெழுதிய ஒப்பணையின் யுக்தாயுக்தத்தைப் பகுத்தறிய வல்லவராம்படி ராபர்ட் ஹால், முதுமைப் பருவத்தில் வியாதியுபத்திரவத்தில் அழுந்தும்பொழுது ஒருநாள் தரையில்படுத்த படுக்கையில், இத்தாலியபாஷை படித்துக்கொண்டிருக்கக் காணப்பட்டார். ஹாண்டெல் இயற்றிய பிரபல கிரந்தம் எதுவும் பிரசுரமாகுமுன்னமே அவருக்கு வயசு நாற்பத்தெட்டாயிற்று. முதுமையென்று எவரும் ஒப்புக்கொள்ளத்தக்க வயசில் நூதனமான துறைகளில் அடிகோலியவர்களையும், நூதனமான கல்விகளைக் கற்றுத் தெளிந்தவர்களையும்பற்றி இவ்வண்ணமே அநேகமாயிரம் திர்ஷ்டாந்தங்கள் எடுத்துக்காட்டலாம். வீணரும் சோம்பருமன்றி மற்றெவரும் "கல்விகற்க எனக்கு வயசு சென்று போயிற்று" என்று ஒருபோதும் வீண்சாக்கு சொல்லமாட்டார்கள்.

லோகோபகாரமான பல பெருங்காரியங்கள் செய்து உலகத்தை நிர்வகிப்பவர்களெல்லாம் பெரும்பாலும் புத்திகூர்மையுடையவர்களல்ல; நிலைநீங்கா மனவுறுதியும் உள்ளக்கருத்தும் சோர்பறு முயற்சியுமுள்ளவர்களேயாம். நிபுணர்களுடைய பிரௌட புத்தி யோக்கியவயது வருவதற்குமுன்னமே பக்குவப்படுவதைப்பற்றி எவரும் மறுப்பரிய திர்ஷ்டாந்தம் அநேகம் உண்டெனினும், இளமையில் விளங்கும் புத்திசாமர்த்தியமானது ஒருவன் பிற்காலத்தில் அடையப்போகிற ஏற்றத்தின் உச்சம் இவ்வளவென்பதை ஒருபோதும் குறிப்பிக்கமாட்டாது. யோக்கியவயது வருவதற்குமுன்னமே புத்தி பக்குவப்படுவதானது, புத்தியின் திறத்தை விளக்குவதுபோய்ச் சிலசமயங்களில் ரோகமுண்டாவதற்கு அடையாளமாக முடிகின்றது. விசேஷமாக வியக்கத்தக்க புத்திசக்தியுள்ளவர்களாயிருந்த பிள்ளைகள் எல்லாருக்கும் பின்னிலை என்னவாகின்றது? தலைமாணாக்கரும் வெகுமதிபெற்ற வித்தியார்த்திகளும் எங்கே? அவர்கள் நிலையை ஆதியோடந்தம் விசாரித்துப்பார்ப்போமானால், பள்ளியில் அவர்களுக்கு இளைத்த மந்தபுத்தியுள்ளவர்களாயிருந்தவர்கள் பின்னிட்டுப் பெரும்பாலும் அவர்களை மிஞ்சிப்போயிருக்கிறார்களென்று காண்போம். கெட்டித்தனமுள்ள வித்தியார்த்திகளுக்கு வெகுமதி கிடைக்கின்றது; ஆயினும் தங்களுடைய சுறுசுறுப்பாலும் கைவளத்தாலும் அவர்கள் பெற்றுக்கொள்ளும் வெகுமானங்கள் எப்பொழுதும் அவர்களுடைய விருத்திக்கு ஏதுவாவதில்லை. ஆதலால், செய்யும் பிரயத்தினத்திற்கும், விடாமுயற்சியாய் உழைக்கும் உழைப்பிற்கும், சொன்னசொற்கேட்டு அடங்கிநடக்கும் அடக்கத்திற்குமே முக்கியமாய் வெகுமதி கொடுக்கவேண்டும்.

ஏனெனில் இயற்கையில் மிதமான அறிவுடையவனுயிருப்பினும், தன்னால் ஆமளவிற்கு வருந்திக் கற்கும் வாலிபனையே முக்கியமாய் உற்சாகப்படுத்தவேண்டும்.

கேம்பிரிட்ஜ் வித்தியாசாலையில் ஹீப்ரூ பாஷைக்குப் பிரதம பண்டிதராயிருந்து காலஞ்சென்ற டாக்டர் லீ என்பவருடைய சரித்திரமானது, இக்காலத்தில் வித்தியாவிஷயத்தில் பொறுத்து விடாமுயற்சியும் மனவுறுதியுமாய் உழைத்துப் பாடுபட்டதற்கு ஒரு சிறந்த திருஷ்டாந்தமாகும். அவர் இளமையில் கல்விபயின்றது ஷ்ரூஸ்பெரிக்குச் சமீபத்தில் லக்னோர் தர்மபாடசாலையில். அங்கவர் சற்றுவது கருத்தாய்க் கற்காததுபற்றி உபாத்தியாயர் தம்மிடத்தில் கற்றுப்போன மாணுக்கரில் மந்தபுத்தியுள்ளோர் அனைவருள்ளும் அவர் மிக மந்தனென்று மொழிந்தார். பின்பு தச்சன் ஒருவனிடத்தில் தொழில்பழகவைக்க, அவர் வளர்ந்து ஆடவனுமளவும் தச்சுவேலை செய்துவந்தார். வேலை ஒழிந்திருக்கும் வேளையில் வீண்பொழுது போக்காமல் ஏதாவது வாசிக்க ஆரம்பித்தார். வாசித்த புஸ்தகங்கள் சிலவற்றில் லத்தீன் வாக்கியங்கள் மேற்கோளாய் எடுத்துக் காட்டியிருக்கக் கண்டு, அவற்றின் பொருளை அறிய ஆசைகொண்டு லத்தின் இலக்கண புஸ்தகம் ஒன்று கிரயத்திற்கு வாங்கி அந்தப் பாஷையைக் கற்கத்தொடங்கினுர். "ஒருவன் விரும்பும் மற்றெந்தெந்த விஷயத்தையும் தெளிய அறிந்துகொள்வதற்கு இருபத்துநான்கு எழுத்திற்கு மிஞ்ச ஏதாவது அறியவேண்டுமோ?" என ஆர்கைல் ட்யூக் என்னும் பட்டவர்த்தனருடைய தோட்டக்காரனை ஸ்தொன் என்பவன் நெடுநாள் முந்தி மொழிந்தபடி, லீ நித்திரையினின்று பொழுதோடு எழுந்து இராத்திரி நாழிகை ஏறுமளவும் விழித்திருந்ததனால், தொழில் பழக உடன்பட்ட காலம்கழியுமுன் லத்தீன்பாஷையில் தேர்ந்த பண்டிதரானுர். ஒருநாள் ஒரு தேவாலயத்தில் வேலைசெய்யும்பொழுது க்ரீக் பாஷையில் புதிய ஏற்பாட்டுப் புஸ்தகத்தைக் கண்டு அந்தப் பாஷையும் கற்கும் ஆசை அந்த க்ஷணமே அவர் நெஞ்சில் உதித்தது. அதன்பொருட்டு அவர் தமது லத்தீன் புஸ்தகங்கள் சிலவற்றை விற்று க்ரீக் இலக்கண புஸ்தகம் ஒன்றும் அகராதி ஒன்றும் வாங்கிக் களிப்புடன் வாசித்து விரைவில் அந்தப் பாஷையில் தெளிந்த நிபுணரானுர்.

பிற்பாடு க்ரீக் புஸ்தகங்களை விற்று ஹீப்ரூ புஸ்தகங்கள் வாங்கி, எந்த உபாத்தியாயர் உதவியுமின்றி, புகழ்ச்செல்வமாவது, பொருட்செல்வமாவது பெற நாடாமல், தம் புத்திசாய்ந்த துறையில் இறங்கி ஹீப்ரூபாஷை கற்றுர். அப்பால் கால்டீ, ஸிரியாக், ஸமாரிதன் பாஷைகள் கற்றுக்கொண்டுவந்தார். ஆனால் ஓயாதெப்பொழுதும் அவர் பயின்ற கல்விப்பயிற்சி அவர் தேகசௌக்கியத்தைத் தாக்கத்தொடங்கி, நாட்பட ராத்திரிகாலத்தில் துயிலொ

ழிந்து விளக்கொளியில் நூல்வாசித்து வந்ததனால் அவருக்கு நேத்திரரோகம் உண்டாயிற்று. ஆனதுபற்றிச் சிறிதுகாலம் புஸ்தகங்களை வைத்துவிட்டு ஆறியிருந்து உடம்பு தேறியபின் அவர் மறுபடியும் முன்போலவே அனுதினமும் வேலைசெய்துகொண்டுவந்தார். தச்சுவேலையில் அவர் மிகத் திறமையுள்ளவர் என்று ஊரறியப் பெற்றதனால் வேலை மேலுமேலும் படிந்து கைப்பொருள் ஏறியது. ஆகவே அவர் விவாகயோக்கியதையுள்ளவராகி இருபத்தெட்டு வயதில் மணம்புரிந்தார். அதன்பின் அவர் வித்தியாவிநோதமாகிய சுகபோகத்தை நிறுத்திவிட்டுக் குடும்ப சம்ரக்ஷணைக்குரிய தொழிலில் கண்ணுயிருக்கத் தீர்மானித்துப் புஸ்தகம் அனைத்தையும் விற்றார். அப்படியிருக்க அவருக்கு ஜீவனாதாரமாயிருந்த தொழிற்கருவிப்பெட்டி தீக்கிரையாய்ப்போய் வறுமைப்பிணி அச்சம்காட்டி அவரை வருத்த ஆரம்பித்தது. அவ்வண்ணம் நேராதிருக்குமாயின் அவர் ஜீவனுள்ளளவும் தச்சுவேலைசெய்து பிழைக்கினும் பிழைப்பார். புதுக்கருவி வாங்க அவர்கையில் ஒன்றும் இல்லை, ஆனதுபற்றிப் பிள்ளைகளுக்கு எழுத்தறிவித்துப் பிழைக்க நினைத்தார். இத்தொழிற்கு மூலதனம் எவ்வளவும் வேண்டுவதில்லையே. ஆயினும் இதற்கும் ஒருதடை இருந்தது. அவர் பல பாஷைகளில் பண்டிதராயிருந்தும் சாமானியமான விஷயங்களில் அவருக்குச் சிறிதும் பயிற்சியில்லாதிருந்ததனால் முதல்முதல் அவைகளைக் கற்பிக்க அவரால் ஆகவில்லை. ஆகாதிருந்தும், மனவுறுதியுள்ளவராதலால் அவர் சிரத்தையாய் உழைக்க ஆரம்பித்து, எண்ணும் எழுத்தும் சிறுபிள்ளைகளுக்குக் கற்பிக்கத்தக்கவளவு கற்றுக்கொண்டார். அவர் ஒய்யாரமின்றி நிஷ்கபடமும் சிறந்த ஒழுக்கமுமுள்ளவரென்று காணக்காணப் பலர் அவருக்கு இஷ்டராயினர். இந்த வித்தகனாகிய தச்சனுடைய கல்விப்பேற்றைக் குறித்து எங்கும் புகழ்ச்சி உண்டாயிற்று. அயலூர்க் குரு ஆகிய ஸ்காட் வேதாத்தியாபகர் ஷ்ரூஸ்பெரியில் ஒரு தர்மபாடசாலை உபாத்தியாய உத்தியோகம் அவருக்குத் தேடிக்கொடுத்து இவ்வாசியா கண்டத்திலுள்ள தேசபாஷைகளில் தேர்ந்த நிபுணர் ஒருவர்க்கு அவரை அறிமுகம்பண்ணிவைத்தார். மேற்குறித்த இஷ்டர்கள் புஸ்தகம் வாங்கிக்கொடுக்க, லீ முறையே அரபி, பாரசீகம், ஹிந்துஸ்தானி இந்தப் பாஷைகளைக் கற்றுத் தெளிந்தார். அவர் தமதுதேசத்துக் குடிப்படை வகுப்பில் சாமானிய சேவகம்செய்து வரும்பொழுதும் கல்வியை விட்டுவிடாமல் கற்றுக்கொண்டுவந்தார்; வரவர அவருக்குப் பாஷைகளில் மிகத்தெளிவு உண்டாயிற்று. கடைசியில் முன் அவர்க்கு உதவிசெய்தவரான ஸ்காட் என்பவர் கேம்ப்ரீட்ஜ் சர்வகலாசாலையைச்சேர்ந்த க்வீன்ஸ் காலீஜ் எனும் வித்தியாசாலையில் அவரைச் சேரும்படி செய்தார். அங்கவர் சில நாள் கற்றுக் கணிதத்தில் வல்லவரென்று குறிக்கொள்ளப்பட்டார்.

பின்பு அரபி ஹீப்ரூபாஷா பண்டிதர் உத்தியோகம் காலியாக, அந்தக் கௌரவமான பதவிக்கு யோக்கியரென்று அவரையே தெரிந்தேற்படுத்தினார்கள். அவர் அந்த உத்தியோகத்தை வெகு சாமர்த்தியமாய் நிர்வகித்ததுமன்றி, இவ்வாசியா முதலிய கீழ்த்தேசங்களில் அவரவருடைய பாஷையில் கிறிஸ்தவ வேதப்பிரசங்கம் செய்யப்போக விரும்பியவர்களுக்கு அந்தப் பாஷைகளை அன்றன்று அவகாசம் கண்டு வெகுநேரம் தாமே வேண்டுமென்று போதித்தார். மேலும் அவர் கிறிஸ்துவேத புஸ்தகத்தை ஆசியாவில் வழங்கும் சில பாஷைகளில் மொழிபெயர்த்தார். பின்பு ந்யூஜீலாந்து பாஷையைத் திட்பநுட்பமாய்க் கற்றுக்கொண்டு, அப்பொழுது இங்கிலாந்தில் இருந்த ந்யூஜீலாந்து குறுநிலமன்னர் இருவருக்காக இலக்கண புஸ்தகம் ஒன்றும் நிகண்டு ஒன்றும் இயற்றினார். அவ்விரண்டு புஸ்தகங்களும் இப்பொழுது ந்யூஜீலாந்து பாடசாலைகளில் அனுதினமும் வழங்கிவருகின்றன. ஸாம்யுயெல் லீ பண்டிதரின் வியக்கத்தகுமான சரித்திர சங்கிரகம் இத்தன்மையதாம். இலக்கிய இலக்கணங்களிலும் சாஸ்திரங்களிலும் குறிக்கொள்ளத்தக்க பண்டிதர் பலருடைய சரித்திரங்களில் தன்னைத்தான் பண்படுத்துவதில் கடைப்பிடியைக் குறிகின்ற நீதிபோதகமான பல திர்ஷ்டாந்தங்களுள் இதுவும் ஒன்றாம்.

வழிதப்பி விரைந்தோடும் பந்தயக் குதிரையைச் சரியான வழியில் பொறுத்து நடக்கும் ஆமை கெலிக்கும். முயற்சியுள்ள வாலிபன் மந்தனாயிருப்பினும் பெரிதல்ல. ஒன்றை விரைவில் கற்றுக்கொள்ளும் இளைஞன் அவ்வண்ணமே அதை விரைவில் மறந்திடுவான். கருத்தையும் கடைப்பிடியையும் பண்படுத்த நிமித்தம் இல்லையென்று அவன் விட்டுவிடுவான். மந்தகுணமுள்ள வாலிபனோ இவ்விரண்டு குணங்களையும் அப்பியாசப்படுத்தாமல் தீராது. எவ்வகை யோக்கியதையும் அமைவதற்கு இவ்விரண்டு குணங்களே முக்கியமாம். ஆகவே, தீவிரபுத்தி தோஷமானாலுமாகும். "என் தற்காலநிலை என்னுடைய சொந்த முயற்சியாலாகியது" என டேவி தம்மைக்குறித்து மொழிந்தது யாவருக்கும் ஏற்கும்.

கடைசியாய்ச் சொல்வதாவது:—சிறந்த விற்பத்தி பெரும்பாலும் சாதாரணமான பள்ளியிலாவது உயர்ந்த வித்தியாசாலைகளிலாவது உபாத்தியாயர்களால் அமைவதல்ல, ஆடவரானபின் அவரவர் தம்முயற்சியால் கற்றுக்கொள்வதனால் அமைவது. ஆகவே, தாய்தந்தையர் தங்கள் பிள்ளைகள் புத்தியை வலிமையாய் முதிர்விக்க ஆத்திரப்பட நிமித்தமில்லை; அவர்கள் பதறாமல் பொறுத்துக் காத்திருந்து, ஒழுக்கமும் அடங்கிச் செய்யப்பயில்வதும் தடையறத் தம் பிள்ளைகளைத் தேற்றி வரவிட்டு, இதற்கு மிஞ்ச நடப்பதெல்லாம் தெய்வச்செயல் என்றிருக்கக்கடவர்கள். இளைஞரைத்

தடையறத் தேகாப்பியாசம் செய்து தேகவலிமையும் தேகசுகமும் அடைய விடுவதும், தம்மைத்தாம் பண்படுத்தும் நெறியில் அடியிடு விப்பதும், கருத்தையும் கடைப்பிடியையும் வழக்கப்படுத்திவர அவதானமாய்க் கற்பித்து வைப்பதுமே மாதாபிதாக்களுடைய கடன். இளைஞர் பருவம் ஏறஏறத் தேறுவதற்குரிய சாதனம் இருந்தால், எப்பொழுது வேண்டுமானாலும் தம்மைத்தாம் பண் படுத்த வல்லவராவார்கள். கல்விகற்கக் காலநியதியுண்டோ?

கெரோசீன் எண்ணெயைப்பற்றி.

நமது தேசத்திலும் தேசாந்தரங்களிலும் ஆதிதொட்டு வீடுகள் வீதிகள் ஆலயமண்டபங்கள் முதலிய பலவிடங்களுக்கும் தீபா லங்காரங்கள் செய்துவருகின்றனர். ஆயின் தீபம் எரிப்பதற்குரிய கருவிமட்டும் ஒன்றாயிருக்கவில்லை. தேசத்தில் நாகரிகம் விருத்தி யாக ஆக தீபம் எரிப்பதற்கு ஏற்ற கருவிகளும் புதிதுபுதிதாய் வெவ் வேறாகக் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. சிறிதுகாலத்திற்கு முன்வரையில் பற்பல வித்துக்களினின்றும் ஆடியெடுத்த எண் ணெயே விளக்கெரிப்பதற்கு ஏற்ற கருவியாய் எல்லாத்தேசத்தா ரும் உபயோகித்து வந்ததாகத் தெரியவருகிறது. இக்காலத்திலும் அநேகர் அந்தத் தைலங்களையே ஊற்றி விளக்கேற்றிப் பலவிடங்களி லும் தீபாலங்காரங்கள் செய்துவருகின்றனராயினும், இந்தத் தைல விளக்கைப் பார்க்கிலும் எத்தனையோ பங்கு சிறந்ததான ஒளிதரத் தக்க கருவிகள் பல இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவை மெழுக்குவர்த்தி, கொழுப்புவர்த்தி, கரிவாயு, மின்னொளி, கெரோசீன் எண்ணெய் என்று வழங்குகிற கல்தைலம் முதலியவை களாம். இவற்றுள் கல்தைலம் ஒன்றுதவிர மற்றவைகளின் சொரூ பத்தை நமது ஜநவிநோதிநியில் முன்னமே ஆங்காங்கு வெளியிட் டிருக்கிறோம். இக்கருவிகளாலாகிய விளக்குகள் எல்லாவற்றுள் ளும் மின்னொளிவிளக்கே எல்லாவிஷயங்களிலும் மிக்க மேன் மைபெற்றதாயினும் அது விசேஷமான பொருட்செலவின்றிச் சாதிக்கக்கூடாதாகையால், அரசர்கள் பிரபுக்கள்முதலிய தனவான் கள்தவிர மற்றவர்களுக்கு அது எளிதில் உபயோகப்படத்தக்க தன்று. யோசிக்குமளவில் கெரோசீன் என்னப்பட்ட கல்தைலமே பேதைமுதற்கொண்டு பிரபுவரையுமுள்ள பலவகை ஜனங்களுக் கும் எளிதில் உபயோகப்படத்தக்க உயர்ந்த விளக்கொளி கருவி யெனத் தோன்றுகின்றது. இந்தக் கல்தைலம் விலை நயமாகவும் அதிக பிரகாசமாய் ஒளிதருவதாயும் இருப்பதால், இதன் பெருமை விசேஷமாய் பரவப்பரவ, இதுவரை வழங்கிவரும் வித்துத்தைலங்

களுக்குப் பதில் இதுவே எங்கும் வழங்கலாகுமென்று உறுதியாய்ச் சொல்லத்துணிகிறோம்.

இந்தக் கெரோசின் எண்ணெயானது எள்ளு, ஆமணக்கு, தேங்காய், கடலைக்காய் இவைகளைப்போன்ற வித்துக்களினின்றுவது, மீனெண்ணெய் முதலியவைகளைப்போல பிராணிகளின் சரீரத்தினின்றுவது வடித்தெடுத்த பொருளல்ல. ஆயினும் அதின் சொரூபம் தெரியாத அநேகர் இத்தேசத்தில் அது ஒரு பிராணியின் சரீரத்தினின்றும் வடித்தெடுத்த அசுசியான பொருளென்று நினைத்து அதை உபயோகிக்கப் பின்வாங்கி நிற்கின்றனராகையால், அப்படிப்பட்டவர்களுக்கும் அதன் இயற்கை தெளிவாக விளங்கும்படி அது இன்னவிடத்தில் இன்னவிதமாய்க் கண்டெடுக்கப்படுகிறதென்பதை இதனடியில் ஒருவாறு உரைக்கின்றோம்.

இந்த எண்ணெய் பூமிக்குள் ஆழ்ந்தகனிகளில் கண்டெடுக்கப்படுகின்றது. இந்த எண்ணெய் அகப்படுமிடங்களெல்லாம் அநேகமாய் நிலக்கரிகள் அடர்ந்த தரையும், பூர்வகாலத்துக் காடுகள் அழிந்து மக்கிய பூமிகளுமாகவேயிருக்கின்றன. அது ஏறக்குறைய இப்பூமியின் எந்தப் புறத்தும் காணப்படுகின்றதாயினும் இதுவரையில் அமெரிக்காகண்டத்திலுள்ள ஐக்கியமாகாணத்திலேயே முக்கியமாய்க் கண்டெடுக்கப்பட்டுவருகின்றது. ஏறக்குறைய இருபது வருஷங்களுக்குமுன்புதான் இப்படிப்பட்ட விலைபெற்ற பொருள் பூமிக்குள் அடங்கியிருக்கிறதென்பதைக் கண்டறிந்து வெட்டியெடுக்கலானார்கள். ஆயின் இப்படி ஒரு தைலம் உண்டென்பதுமாத்திரம் அந்தப் பிரதேசத்து ஜனங்களுக்குப் பலவருஷங்களாகத் தெரிந்திருக்கின்றது. அவர்கள் அதைச் சில வியாதிகளுக்கு ஏற்ற மருந்தாயும் உபயோகித்து வந்தனர். வாதரோகங்களுக்கு மேலே தடவுவதும், குளிர்காய்ச்சல்களுக்கு உள்ளுக்குப் புசிப்பதுமாயிருந்தார்கள். சென்ற நாற்பது வருஷகாலமாய் ஐக்கிய மாகாணத்தார் இவ்வண்ணமே உபயோகித்து வருகின்றனர். பூமிக்குள் இந்த எண்ணெய் வெட்டியெடுப்பவர்களும் தங்களுக்குக் குளிரினால் எவ்விதமான வருத்தமும் உண்டாகாதபடி இந்த எண்ணெயை விடாமல் குடித்துக்கொண்டு வருவது வழக்கமாம். அவர்களைப்போல அத்தனை விசேஷமாக மற்றவர்கள் அதை உள்ளுக்கு உபயோகப்படுத்தாமற்போனாலும், அதைக் குடிப்பவர்களுடைய தேகசவுக்கியத்தைப் பார்க்கும்போது அது மன்னுயிர்க்கு மிகச் சிறந்த மருந்தெனத் தோன்றுகிறது.

கெரோசின் எண்ணெய் பூமிக்குள் இன்னவிடத்தில் இருக்கிறதென்பது அதையடுத்த ஆகாயத்திலே வியாபித்திருக்கும் அதன் நாற்றத்தாலும், சில விடங்களில் அதை யடுத்துள்ள குளம் குட்டைகளில் நீரின்மேல் எண்ணெய் படர்ந்திருப்பதனாலும் கண்டறியப்படு

கின்றது. அவ்விடங்களெல்லாம் வெகுவாய்ப் பள்ளத்தாக்குகளாயும் சதுப்புநிலங்களாயுமிருக்கின்றன. அவ்விடங்களில் ஒருவகை நாற்றமுள்ள காற்றினாலும் எண்ணெய் கலந்த தண்ணீர்க் குட்டைகளாலும் பூமிக்குள் இன்னவிடத்தில் கெரோசீன் எண்ணெய் இருக்கின்றதெனக் காணப்பட்டவுடனே பலவேலைக்காரர்கள் அதற்கென்று செய்யப்பட்டிருக்கும் ஒரு யந்திரத்தை அவ்விடத்தில் கொண்டுபோய் அதனால் பூமியைத் தோண்டி 500-600 அடி ஆழத்தின் கீழ் உள்ள எண்ணெயை வெகு சுலபமாய்க் கண்டெடுப்பார்கள். ஆனால் ஒவ்வொரு சமயங்களில், பூமிக்குள் எண்ணெய் அதிகமாய் இருக்கிறதென்பதைக் குறிக்கின்ற குறிகளும் தெளிவாய்த் தெரிந்து அதைக் கண்டெடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளும் அதிகமாய்ச் செய்தாலும், எண்ணெய் அகப்படாமற்போவதும் உண்டு. சில சமயங்களில் எண்ணெய் அபரிமிதமாய் அகப்படுவதுபோலிருந்து திடீரென்று தவறிப்போவதும் உண்டு. நன்றாய் உலர்ந்துபோயிருந்த கிணறுகளில் விசேஷமாய் எண்ணெய் சுரப்பதும் உண்டு. இப்படிக் கெரோசீன் எண்ணெய் அகப்படுவது மிகவும் அநிச்சயமாயிருப்பதால் அநேகர் இவ்விஷயத்தில் அதிக கவலைகொள்கிறார்கள். சிலசமயங்களில் விசேஷமாக மூலதனம் வைத்து வேலைசெய்யத் துவக்குகிறவர்களுக்கு ஒரு பயனும் கிடைப்பதில்லை. ஒருசமயத்திலே போய்ச் சிறிதளவு முயற்சிசெய்யும்போதே அளவற்ற எண்ணெய் கிடைக்கின்றது. அதனால் கெரோசீன் எண்ணெய் அகப்படுகின்ற தேசங்களில் பல மாறுபாடுகள் உண்டாகின்றன. ஏதாவது ஒரு நடுக்காட்டில் எண்ணெய் அகப்படத் தொடங்கினால் அந்தநிமிஷமே அவ்விடத்தில் மாயையினால் அமைந்ததுபோல் ஒரு பட்டணம் உண்டாகின்றது. எண்ணெய் சுரப்பது ஓய்ந்துபோன மறுநிமிஷமே அப்பட்டணம் அழிந்துபோகின்றது.

வெளியிலிருந்து புதிதாய்ப் போகின்றவர்களுக்கு அப்பட்டணங்களில் முதலில் சகிக்கக்கூடாத ஒருவகை வெடுப்பான நாற்றம் தோன்றுமாயினும், அவ்விடம்போன சிறிதுநேரத்துக்கெல்லாம் அந்த நாற்றமே வழக்கமாகிப் பின்பு அதில் ஒரு கெடுதியும் தோற்றுவதில்லை. அந்த வழக்கத்தினால் அநேகர்க்கு மற்றக் காற்றுகளைவிடக் கெரோசீன் எண்ணெயின் நாற்றம் கலந்த காற்றை மோருவதிலேயே அதிக விருப்பமுண்டாகின்றது. கெரோசீன் எண்ணெய்க் கிணறுகளினின்றும், மற்றுமெங்கும் பரந்த அந்த எண்ணெயினின்றும் எழுகின்ற ஆவியானது வெகுசீக்கிரத்தில் பற்றியெரியும் தன்மையுடையது. நெருப்பைக் கையாளும்போது சிறிது அஜாக்கிரதையாகக் கையாடினால் உடனே அது வெடித்துப் பெருந்தீங்கு விளைவிக்கும். வெடிமருந்து கிடங்குகளில் வாஸம்பண்ணுவதைப் பார்க்கிலும் இந்தக் கெரோசீன் எண்ணெய்ப் பட்டணங்களில் வாஸம்

பண்ணுவது மிகவும் அபாயத்துக்கு இடமானதென்கிறார்கள். இவ்வளவு அபாயம் விளைவிப்பதாயிருந்தும், கூடாதென்று விளம்பரம் செய்து எங்கும் பிரசித்தப்படுத்தினாலும், அவ்வளவையும் லக்ஷியம்பண்ணாமல் துணிந்து, அந்த எண்ணெய் எடுக்க வேலைசெய்கிறவர்கள் சுருட்டுக்குடிப்பதை நிறுத்துவதில்லை.

இருந்தாற்போலிருந்து கெரோசின் எண்ணெய் தேசாந்தரங்களுக்குக் கொண்டுபோய் வர்த்தகம் செய்வதற்கு ஏற்றபொருளாய் அமைந்ததனாலும், அதைக் கண்டெடுப்பதற்கு வேண்டிய துணைக்கருவிகள் யாவும் ஏற்றவண்ணம் அமைந்திருப்பதனாலும், அந்த எண்ணெய் எடுத்து வியாபாரம்செய்ய முயன்றவர்களுக்குச் செல்வம் விசேஷமாய் விருத்தியாவதற்கு அது முக்கியாதாரமாயிற்று. இப்படி அவர்கட்கு எதிர்பாராச் செல்வம் அபரிமிதமாகக் கிடைக்கத்துவக்கியது, முன் இத்தேசத்து ஓயிநாட்டுச் சீமையிலே திடீரென்று பொன் காணப்பட்டதனால் சிலர் வெகு சீக்கிரத்தில் செல்வவான்களானதுபோன்றது. இப்போது அந்தத் தைலத்தின் விலை முன்னிருந்த விலையில் நான்கிலொன்றுக்கு அதிகப்படாதிருந்தாலும், அதனால் உண்டாகும் லாபம்மாத்திரம் அளவற்றிருக்கின்றது. அத்தேசத்தில் ஒரு சங்கத்தார் கெரோசீன் எண்ணெய்க் கிணறு முழுகுகிற் நிமித்தம் இருபதினாயிரம் ரூபாய் செலவுசெய்தார்கள். அவர் கோரினபடியே அவ்விடத்தில் எண்ணெய் விசேஷமாய் அகப்பட்டது. அகப்பட்ட ஒரு வாரத்திற்குள்ளேயே அந்த எண்ணெயை விற்று முதலாகவைத்த பணத்தைப்போலப் பன்னிரண்டு பங்கு அதிகமான பொருள் சம்பாதித்தார்கள். ஆயினும் அவ்வளவோடே அந்த எண்ணெய் செலவழிந்து போகவில்லை. மிகுதி எண்ணெயை விற்பதனால் அதுமுதல் நாள்தோறும் சுமார் இரண்டாயிரம் ரூபாய் கிடைத்துக்கொண்டுவருகிறது. பயிர்செய்து அன்றாடம் ஜீவனம்பண்ணவும் சக்தியில்லாத அநேகம் எளிய குடியானவர்கள், தங்கள் நிலத்தில் இந்த எண்ணெய் அகப்படக்கண்டு அதனால் திடீரென்று விசேஷ தனவான்களாயினார்கள்.

சில வருஷங்களாகக் கெரோசீன் எண்ணெய் இவ்விந்துதேசத்திற்கு வெகு விசேஷமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது. 1875-76-ம் வருஷங்களில் 5,36,575 காலன் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கச் சென்ற நான்கு வருஷங்களாக வருஷந்தோறும் அதைப்போல ஆறத்தனை அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இவ்வருஷத்திலோ சுமார் 40,00,000, காலன் ஏற்றுமதியாகும். இவ்விந்தியாவுக்கு வருஷவாரி ஏற்றுமதியாகிற எண்ணெயின் கிரயம் 25 லக்ஷம் ரூபாய்க்குக் குறைவில்லை.

கெரோசீன் எண்ணெய் இவ்வண்ணம் தேசாந்தரங்களில் அகப்படுகின்றதென்பது மாத்திரமேயல்ல; இவ்விந்தியாவிலும் விசேஷமாய் அகப்படுமென்பதற்கு வேண்டிய குறிகள் இருக்கின்றன.

பிரிட்டிஷ் பர்மாவையடுத்த ஒரு தீவுதொடங்கி அத்தேசத்தில் நெடுந்தூரம் பூமியில் கெரோசீன் எண்ணெய் பாய்ந்திருக்கின்றது. அங்கே சிலவிடங்களில் எண்ணெய் தடித்து அசுத்தமானதாயிருந் தாலும் சிலவிடங்களில் மிகவும் உத்தமமானதாயிருக்கின்றது. சீக் கிரத்தில் இவ்விந்தியாவிலேயே முதல்தரமான எண்ணெய் கண்டு பிடிக்கலாகுமென உறுதியாய்ச் சொல்லுகிறார்கள்.

கடைசியாய் இங்கே ஒரு வார்த்தை சொல்லுகிறோம். இதைச் சற்று கவனியுங்கள். இந்த எண்ணெயில் உயர்ந்ததென்றும் மட்ட மென்றும் இரண்டுவிதம் உண்டு. சென்ற சில வருஷங்களாக மிக வும் மட்டமான எண்ணெய் இத்தேசத்திற்கு வந்துகொண்டிருக்கின் றது. யோசித்துப் பார்க்கையில் ஆதியில் அப்படியில்லை. கீழ்த்தர மான எண்ணெயிலுண்டாகும் ஆவி வெகு சீக்கிரத்தில் தீப்பற்றிக் கொள்ளும் தன்மையுடையதாகையால் அது அபாயத்துக்கிடமா னது. இருந்தாற்போலிருந்து அவ்விதமான எண்ணெய் ஒவ்வொரு சமயங்களில் வெடித்துப் பெருந்தீங்கு விளைவிக்கும். ஆனதுபற் றியே இவ்விந்தியாவைப் போன்ற உஷ்ணதேசங்களில் கீழ்த்தரமான கெரோசீன் எண்ணெயை ஒருபோதும் உபயோகிக்கக்கூடாதென்று துரைத்தனத்தாரே விளம்பரம் செய்திருக்கிறார்கள். ஆதலால் கெரோ சீன் எண்ணெய் வாங்கி உபயோகிப்பவர்கள் சிறிதுவிலை அதிகமா யிருந்தாலும் அந்த எண்ணெயின் குணத்தை நன்றாய்க் கண்டறிந்து முதல்தரமான எண்ணெயையே வாங்கி உபயோகிக்கக்கடவர்கள். இல்லாவிட்டால் ஒவ்வொரு சமயங்களில் அதனால் பிரமாதங்கள் உண்டாகும். இவ்விஷயத்தில் கொஞ்சம் எச்சரிக்கையாயிருந்து உயர்ந்தவகையான எண்ணெய்களையே உபயோகித்து வருவோமா னால் எவ்விதமான அபாயமும் உண்டாவதில்லை.

அற்புதமான ஒரு கட்டில்.

முன் ஒரு காலத்திலே விராடதேசத்தில் வஸந்ததிலகன் என்று ஒரு வர்த்தகனிருந்தான். அவனுக்குச் சூடாமணியென்று ஒரு புத்திரனுண்டு. தாய்தந்தையர்களுக்கு அவன் ஒரே மகனானகையால் அவர்கள் அவனிடத்தில் அதிக நேசம்கொண்டவர்களாகி, அவனை ஒரு வேலையும் செய்யவொட்டாமல் அவன் மனம்போனபடியெல் லாம் களித்து விளையாடித் திரியவிட்டுத் தாங்களே அவனுக்காக வரு ந்தியுழைத்துக்கொண்டிருந்தார்கள்; குழந்தைக்குக் கல்வியாவது கைத்தொழிலாவது ஒன்றும் கற்பிக்கவில்லை. தங்களுக்கு மரணம் சம்பவித்துத் தம் அருமைக் குழந்தையைத் தனியேவிட்டுப் போம் படியான காலமொன்று வருமென்பதையும், அக்காலத்தில் அவன்

தானே வருந்தியுழைத்து வயிறுவளர்க்கவேண்டியதாகும் என்பதையும் அவர்கள் சிறிதும் நினைக்கவில்லைபோலும். இப்படியிருக்கச் சூடாமணிக்கு விவாகம்செய்யும்படியான வயது வந்தது. அது தெரிந்து பெற்றோர்கள் அவனுக்குத் தகுந்த கன்னிகையொருத்தியைத் தேடிக் கலியாணம்செய்வித்தார்கள். கலியாணமானபின்பு சில காலம் அனைவரும் ஒன்றாய்க்கூடிச் சுகமாக வாழ்ந்திருந்தார்கள்.

இப்படியிருக்க நாளளவிலே தாய்தந்தையர்களிருவரும் இறந்துபோனார்கள். ஐயோ! இப்போது சூடாமணி என்னசெய்வான். ஏதாவது ஜீவனோபாயமொன்று தேடிக்கொள்ளப் பெற்றோர்கள் அவனுக்கு யாதொருவழியும் கற்பிக்கவில்லையே. ஆயினும் அவன் தாய் தந்தையர்களிறந்த சிலநாள்வரையில் அவர்கள் தேடிவைத்திருந்த பொருளைக்கொண்டு பெண்சாதியும் தானுமாய் ஜீவனம்செய்துவந்தான். ஆயினும், ஒருவர் தேடிவைத்த பொருள் எத்தனை நாளைக்குத் தாங்கும்? கையசைக்காது தின்றால் குன்றும் கரையுமல்லவா? "தேடாதழிக்கிற் பாடாமுடியும்" என்ற பெரியோருரையும் இருக்கின்றதே. அவர்கள் தன் முயற்சியொன்றுமில்லாமல் தாய்தந்தையர் தேடிவைத்த பொருளையே தினந்தோறும் தின்றுகொண்டு வரவே, சீக்கிரத்திலேயே அந்தப் பொருள் அநேகமாய்ச் செலவழிந்துபோயிற்று. அதைப்பற்றிச் சூடாமணிக்குச் சிறிதும் சிந்தை தோன்றவில்லையாயினும், அவன் மனையாட்டிக்குமட்டும் அதைப் பார்க்கப் பெருந்துயரமுண்டாயிற்று. பெரியோர் தேடிவைத்த பொருள் குறையக்குறைய அவளுடைய மனவிசாரம் அதிகரித்துக்கொண்டேவந்தது. இப்படி அந்தப் பொருளெல்லாம் அநேகமாய்ச் செலவழிந்துபோகக் கண்டு ஒருநாள் அவள், ஐயோ! இந்தச் சொற்பமும் செலவழிந்துபோனபிறகு நாம் என்னசெய்கிறது? நம் கணவனுக்குக் கைத்தொழிலும் தெரியாது, கஷ்டப்படவும் தெரியாதே என்று அதே சிந்தையாக மனக்கவலைகொண்டிருந்தாள். ஒருநாள் அவள் மிகவும் முகம்வாடி மனங்கலங்கி நிற்கக்கண்டு சூடாமணி அவளண்டைபோய், என் காதலியே, நீ ஏன் இப்போது இப்படி விசனமுற்றிருக்கிறாய்? என்ன விசேஷம் என்று கேட்க, அவள், மற்றொரு விசேஷமுமில்லை; வயிறுவளர்ப்பதுதான் பெரிய விசேஷமாயிருக்கிறது. நம் பெரியோர் தேடிவைத்த பொருள் அத்தனையும் செலவாகிவிட்டதே. இனி நாம் என்னசெய்கிறது? உமக்கு உழைத்து வேலைசெய்யவும் தெரியாது; வர்த்தக வியாபாரங்களிலும் பயிற்சியில்லையே! நாம் பிழைக்கும் வழி என்னவென்று விசாரப்படுகிறேன் என்றாள். அதுகேட்டுச் சூடாமணி, இதற்காகவா நீ விசனப்படுகிறாய்? வேண்டாம். எனக்கு வேலைசெய்யத் தெரியும். எதற்கும் சுவாமியிருக்கிறார். மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்காமற்போவானா? என்று சொல்லிச் சமாதானப்படுத்தினான்.

அப்படியிருக்க ஒருநாள் காலையிலெழுந்து சூடாமணி குடாரியைக் கையிலெடுத்துக்கொண்டு தன் பெண்சாதியைப் பார்த்து, என் கண்மணியே, நான் இப்போது வெளியேபோய் வேலைசெய்துவிட்டு வருகிறேன். பகல்வேளைக்கு ஏதாவது போஜனமிருந்தால் கட்டிக்கொடு. சாயந்தரந்தான் திரும்பி வீட்டுக்கு வருவேனென்ருன். அதுகேட்டு அவள், இவன் என்னவேலை செய்யப்போகிருனென்று வியப்புற்ருளாயினும், அதைப்பற்றி அவனை ஒன்றும் கேளாமலே சோறுகட்டிக் கொடுத்தனுப்பினுள்.

பெண்சாதி கட்டிக்கொடுத்த சோற்றை வாங்கிக்கொண்டு சூடாமணி குடாரியும் கையுமாய் ஒரு பெருங்காட்டுக்குப் போனுன். அக்காட்டில் அவன் பகற்பொழுதெல்லாம் சுற்றித்திரிந்து, அங்குள்ள மரங்கள்தோறும்போய் நின்று, நான் உன்னை வெட்டலாமா, நான் உன்னை வெட்டலாமா என்று கேட்டான். மரம் மனிதரோடு பேசுமா? தான் கேட்டகேள்விக்கு அக்காட்டில் ஒரு மரமும் மறுமொழி கொடாமற்போகவே ஒரு மரத்தையும் வெட்டத்துணியாமல் அவன் போனபடியே திரும்பி வீடுவந்து சேர்ந்தான். வீட்டுக்கு வந்தவுடன் பெண்சாதி அவனுக்கு வேண்டியபடி உபசாரம் செய்தாளாயினும், இன்று எவ்விடத்திற்குப் போயிருந்தீர்கள் என்ருவது, என்னவேலை செய்தீர்களென்ருவது, ஒன்றும் அவள் கணவனைக் கேட்கவில்லை. அவனும் தான் போய்வந்த செய்தி இன்னதென்று மனையாளுடன் உரைக்கவில்லை.

மறுநாள் காலையிலும் அவன் முன்போலவே எழுந்து, இன்றைய தினமும் நான் வெளியே போகிறேன்; பகற்போஜனத்துக்குச் சோறு கட்டிக்கொடுவென்று கேட்க, அப்போதும் அவள், நீங்கள் எங்கே என்னவேலை செய்யப்போகிறீர்களென்று வினவ விரும்பாமல் சோறு கட்டிக்கொடுத்தனுப்பினுள். சூடாமணியும் குடாரியை எடுத்துத் தோளில் வைத்துக்கொண்டு முதனுள் போன காட்டுக்குப் போகாமல் மற்றெரு புறத்திலுள்ள பெருங்காட்டுக்குப் போனுன். இந்தக் காட்டிலும் அவன் முன்போலவே மரங்கள்தோறும் சென்று, உன்னை நான் வெட்டலாமா? உன்னை நான் வெட்டலாமாவென்று கேட்க, ஒரு மரமும் பதில் உத்தரம் உரைக்காமற்போகவே, கட்டுச்சோற்றைமாத்திரம் அங்கோரிடத்தில் வைத்துத் தின்றுவிட்டு மாலைவேளையில் வீட்டுக்கு வந்தான்.

மூன்ருநாள் மற்றெரு புறத்திலுள்ள காட்டுக்குக் குடாரியை எடுத்துக்கொண்டு போனுன். அக்காட்டிலும் அவன் ஒவ்வொரு மரத்தண்டையிலும் போய் நின்று நான் உன்னை வெட்டலாமாவென்று வேண்டிக் கேட்க, அவ்விடத்திலும் ஒரு மரமும் விடைகொடாமற்போகவே மிகவும் விசனமுற்றவனுகி வீடுவந்து சேர்ந்தான்.

ஆயினும் அவன் அவ்வளவோடு அம்முயற்சியை விட்டுவிடவில்லை. பிடித்தகாரியத்தை எப்படியாவது முடித்தே தீரவேண்டும் என்ற விடாமுயற்சியுடையவனாகி மறுநாள் வேறொரு புறத்திலுள்ள வனத்திற்குப்போய் அன்றுமுழுதும், நான் உன்னை வெட்டலாமாவென்று கேட்டுக்கொண்டே அக்காட்டிலுள்ள மரங்கள்தோறும் போய்ச் சுற்றினான். ஒரு மரமும் மறுமொழி கொடுக்கவில்லை. அப்படியிருக்க அன்று மாலைப்பொழுதில் ஒரு பெரிய மாமரத்தண்டைபோய், நான் உன்னை வெட்டலாமாவென்று கேட்டதற்கு, அந்த மாமரம், சுகமாய் வெட்டிக்கொள் என்று அனுமதிகொடுத்தது. மரம் எங்கேயாவது பேசுவதுண்டாவென்பீர்களோ? சிறுவனான சூடாமணியினுடைய மனவுறுதியைப்பார்த்து அவனிடத்தில் கருணைகூர்ந்து கடவுளே அவன் மிகுந்த செல்வவானாகி க்ஷேமமாய் வாழ்ந்திருக்கட்டுமென்று திருவுளம்பற்றி அம்மாமரத்தை அவ்விதமாகப் பேசும்படிச் செய்தார்.

அந்தப் பேச்சைக் கேட்கவே சூடாமணிக்கு அதிக சந்தோஷமுண்டாயிற்று. அவனுக்கு வெகு விசித்திரமாய்க் கட்டில் நிருமிக்கத் தெரியும்; அதற்கு வேண்டிய மரம் அகப்படவில்லையேயென்று அதற்காகவே அவன் இத்தனை நாள் தேடித்திரிந்தான். இந்த மாமரம் தன்னை வெட்டிக்கொள்ளும்படி சொன்னதுகேட்டுக் கடவுள்தான் கிருபைபண்ணினாரென்று அவன் உடனே அம்மரத்தை வெட்டியெடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போனான். கணவன் பெரிய ஒரு மரத்தைத் தலையில் தூக்கிக்கொண்டுவருவதைப் பார்த்து வீட்டிலிருந்த பெண்சாதி, இதென்ன இவர் இந்த மரத்தைத் தூக்கிக்கொண்டு வருகிறார், இதையென்ன செய்யப்போகிறார் என்று சிந்தித்துக்கொண்டிருந்தாள். ஆயினும் அதைப்பற்றி அவனை ஒன்றும் கேட்கவில்லை.

மறுநாள் காலையில் சூடாமணி எழுந்து அந்த மரத்தை அவ்வீட்டில் ஒரு அறைக்குள் கொண்டுவைத்து, தன் பெண்சாதியை அழைத்து, இனி ஒரு வாரம்வரையில் நான் இந்த அறையைவிட்டு வெளிவரமாட்டேன், நீயும் இவ்வறைக்குள் வரக்கூடாது. அதுவரையில் அன்றன்றும் வேண்டிய ஆகாரத்தைமாத்திரம் நீ ஒரு சிறிய சாளரத்தின்வழியாய் இவ்வறைக்குள் வைத்துவிடவேண்டும். அதுவரை நானும் உன்னுடன் பேசமாட்டேன்; நான் உன்னைக் கூவுகிறவரையில் நீயும் என்னுடன் பேசக்கூடாதென்று திட்டம் செய்துவிட்டு அவன் அந்த அறைக்குள் புகுந்து கதவைப் பூட்டிக்கொண்டான். அதுகண்டு அவன் பெண்சாதி, ஒரு வாரம்வரையில் இவர் இவ்வறைக்குள் புகுந்துகொண்டு என்னவேலை செய்யப்போகிறார்? நானும் பார்க்கக்கூடாதென்கிறாரே? இதென்ன புதுமையோ தெரியவில்லையென்று அதிசயப்பட்டுக்கொண்டிருந்தாள்.

இப்படியிருக்க அவன் சொன்னபடியே ஒருவாரமாயிற்று. அதற்குள் அவன் அந்த மாமரத்தினுல் அனைவரும் வியக்கத்தக்க வெகு விசித்திரமான கட்டிலொன்று செய்துமுடித்தான். அப்படிப் பட்ட கட்டிலை அதுவரை எவரும் கண்டிருக்கமாட்டார்கள். வேலை முற்றும் நன்ருய்த் தீர்ந்தவுடனே அவன் தன் பெண்சாதி யைக் கூவிக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வரும்படி அழைத் தான். வந்ததும் அவளைக் கண்டு, என் காதலியே, நான் எவ்வித மான கட்டில் செய்துமுடித்திருக்கிறேன் பார் என்ருன். அந்தக் கட்டிலைப்பார்த்து அவள் அதிக ஆச்சரியமடைந்து, என் பிராண நாயகரே, இக்கட்டில் உம்முடைய வேலைத்திறமா? ஆ! இது எவ்வ ளவு விசித்திரமாயிருக்கிறது? இப்படிப்பட்ட பொருளை நான் இவ் வுலகில் எங்கும் கண்டதில்லையென்று சொல்லிச் சந்தோஷமடைந் தாள்.

அன்றையதினமெல்லாம் அவன் எங்கும் வெளியே போ காமல் வீட்டிலேயே இளைப்பாறியிருந்து மறுநாள் காலையில் கட் டிலை எடுத்துக்கொண்டு அரசன் அரண்மனைக்குப் போய் அரண் மனைவாயிலில் அதை வைத்துக்கொண்டு உட்காந்தான். அவ்வ ரண்மனையிலுள்ள வேலைக்காரர்கள் அனைவரும் அதைப் பார்க்க ஓடிவந்தார்கள். அதைப்பார்த்து அவர்கள் மிகவும் வியந்து இத்தன் மையான புதுமையை யாராகிலும் எப்பொழுதாவது கண்டதுண் டா என்று ஒருவர்க்கொருவர் சொல்லி மகிழ்ச்சியடைந்தார்கள். பின்பு அவர்கள் சூடாமணியைப்பார்த்து, இது உன்னுடையதா? விற்பனைக்காக கொண்டுவந்த பொருளா? இதைச் செய்தது யார்? இது முழுதும் உன்னுடைய வேலைத்திறமாவென்று கேட்க, அவன் உங்களுடைய கேள்விகளுக்கு நான் இப்போது விடைகொடுக்க மாட்டேன்; நான் உங்களுடன் பேசுவதில்லை. மகாராஜா வந்து கேட் பாராஞல் எல்லாவற்றையும் அவருடன் சொல்வேன் என்ருன். உடனே அந்தச் சேவகர்கள் அரசனிடம் சென்று, தங்களுடைய அரண்மனைவாயிலில் ஒருவன் வெகு விசித்திரமான கட்டிலொன்று வைத்துக்கொண்டிருக்கிருன். நாங்கள் கேட்டால் எங்களுடன் ஒன்றும் பேசமாட்டேனென்கிருன். நேராகத் தங்களோடுதான் பேசுவாஞமென்ருர்கள். அதுகேட்டு அரசனும் அதிக சந்தோஷ மடைந்து, நல்லது, அப்படியே அவனைச் சீக்கிரம் இங்கே வரவழை யுங்கள் என்ருன்.

அரசன் கேட்டுக்கொண்டபடியே சூடாமணி தன் கட்டிலை எடு த்துக்கொண்டு அரசன் எதிரிலேபோய் நின்ருன். அவனைப்பார்த்து அரசன், இந்தக் கட்டில் விற்பனைக்குக் கொண்டுவந்ததாவென்று கேட்க, சூடாமணி, ஆம், விற்பனைக்கு வந்ததுதானென்ருன். ஆ! இந்தக் கட்டில் எவ்வளவு விசித்திரமாயிருக்கிறது? இதைச் செய்தது யார்? என்று அரசன் கேட்டதற்கு அவன், நானே செய்ததென்று

சொல்ல, அரசன் மிகவும் ஆச்சரியப்பட்டு, ஆயின் இதன் விலை என்னவென்று கேட்க, சூடாமணி, இதன் விலை ஆயிரம் ரூபாய் என்றான். ஆ! என்ன? ஆயிரம் ரூபாயா? ஒரு கட்டில் ஆயிரம் ரூபாயென்று இதுவரையில் எவரும் கேள்விப்பட்டதில்லையே! என்று அரசன் வியந்துநிற்க, அச்சிறுவர்த்தகன், அதென்னவோ நான் அறியேன்; இதன் விலை ஆயிரம் ரூபாய்க்குக் குறைவில்லை. இஷ்டமானால் வாங்கிக்கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் விட்டுவிடுங்கள் என்று துடியாய்ப் பேசினான். அதுகேட்டு அரசன் இக்கட்டிலினிடத்தில் ஏதாவது விசேஷமிருக்கும்; இல்லாவிட்டால் இவன் இப்படி பிடிவாதம் செய்யமாட்டானெனத் தெரிந்து, அப்படியே ஆகட்டும், நீ கேட்கிறபடி ஆயிரம்ரூபாயே வாங்கிக்கொள் என்று சொல்லி அக்கட்டிலை எடுத்துக்கொண்டான். சூடாமணியும் அதன் விலையாகிய ஆயிரம் (1000) ரூபாயையும் பெற்றுக்கொண்டு அரசனைப்பார்த்து, மகா பிரபுவே, இப்போது ஒன்று சொல்லுகிறேன், செவிகொடுத்துக் கேட்கவேண்டும். இக்கட்டிலில் தாங்கள் படுக்கை கொள்ளுகிற முதலிராத்திரி நித்திரைகொள்ளாமல் கண்விழித்துக் கொண்டு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். விழித்திருந்தால் இதன் பெருமை தங்களுக்கு நன்றாய்த் தெரியவரும். ஒருவேளை மறந்து நித்திரைகொள்ளப்போகிறீர்கள்! எச்சரிக்கையாய் இருங்களென்று சொல்லிவிட்டுப் பணத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றான். அவன் கொண்டுவந்த ரூபாயைப்பார்த்து, அவனுடைய மனையாள் மிகவும் சந்தோஷமடைந்து, என் பிராணநாதரே, ஏது இவ்வளவு ரூபாய்? இதெல்லாம் உம்முடையதுதானா? இவ்வளவு உமக்கு எங்கே கிடைத்தது என்று கேட்க, சூடாமணி, அடிபேதாய், இவ்வளவும் நம்முடையதுதான். நான் செய்துகொண்டுபோன கட்டிலை வாங்கிக்கொண்டு, அதற்காக அரசன் எனக்குக் கொடுத்த விலை இது. நான் இதை எங்கேயோ திருடிக்கொண்டுவந்துவிட்டதாக நினையாதே. நான் திருடனல்ல என்று புன்னகைகொண்டு பேசினான். அதுகேட்டு அவளும் உள்ளம் உவந்தாள்.

அன்றிராத்திரியே அரசன் அந்த அற்புதமான மஞ்சத்தின்மேல் ஏறிப் படுத்து, என்ன புதுமையோ பார்ப்போமென்று கண்விழித்திருந்தான். இராத்திரி பத்துநாழிகையானபிறகு அக்கட்டில் கால்களுள் ஒன்று மற்ற மூன்று கால்களையும்பார்த்து, தோழர்காள், நான் இப்போது இந்த மகாராஜாவினுடைய ராஜ்யத்தைப் பார்த்து வரப்போகிறேன். நீங்கள் இந்த மஞ்சம் சாய்ந்து அரசன் கீழே விழாதபடி ஜாக்கிரதையுடன் உறுதியாய்த் தாங்கிக்கொண்டிருக்கிறீர்களா என்று கேட்க, மற்றவைகள், அப்படியே நீ போய்வருமளவும் அரசர்க்கு அபாயமில்லாதபடி நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம்; போய்ச் சீக்கிரமாய் வந்துசேர், என்று சொல்லி விடைகொடுத்தன.

அவைகளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அந்தக் கால் படுக்கையறையைவிட்டு வெளியே போவது அரசன் கண்ணுக்கு நன்ருய்த் தெரிந்தது. கட்டில் கால் அங்கிருந்து புறப்பட்டு ஒரு காட்டிற்குப் போயிற்று. இது போனபோது அக்காட்டிலே இரண்டு நாகங்கள் ஒன்றுக்கொன்று கலகப்பட்டுக்கொண்டிருந்தன. அவற்றுள் ஒரு நாகம் மற்றொன்றைப்பார்த்து, நான் அரசனைக் கடிக்கப் போகிறேனென்று சொல்ல, மற்றொன்று, நீ கடிக்கக் கூடாது, நானே கடிக்கப்போகிறேனென்றது. அதற்கு அந்தப் பாம்பு மறுபடியும், ஓ! நீ ஒருபோதும் கூடாது. உனக்கு முன் நான் கட்டில்மேல் தாவி அவனைக் கடித்துவிடுவேனென்று கூற இரண்டாவது, அது ஒருகாலும் முடியாது. கட்டில்மேல் ஏற உன்னாலாகாது. நான் அவருடைய பாதரக்ஷையில் புகுந்துகொண்டிருந்து, நாளைக்காலையில் அவர் பாதரக்ஷ தரித்துக்கொள்ளும்போது, அவர் காலைக் கடித்துவிடுகிறேன் என்று சொல்லிற்று.

அதைக் கேட்டிருந்த கட்டில்கால் உடனே திரும்பி அரண்மனைக்கு வந்து, தான் கண்டதும் கேட்டதுமாகிய எல்லாச் செய்திகளையும் மற்ற மூன்றுகால்களுக்கும் சொல்லி, நாளைக் காலையில் அரசன் பாதரக்ஷ தரித்துக்கொள்வதற்குமுன் அதைத் தட்டுவாராஞல், அதினின்றும் பாம்பு கீழேவிழக் காண்பார். அப்போது என் பேச்சு மெய்ப்படுமென்றது.

பிறகு மற்றொருகாலானது, இப்போது நான் போய்த் தேசங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன். நான் வருமளவும் நீங்கள் கட்டில் சாயாமல் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டுமென்று சொல்ல, மற்றவைகள் அப்படியே ஜாக்கிரதையாயிருக்கிறோம் போய்வா என்று சொல்லியனுப்பின. உடனே அந்தக் கால் புறப்பட்டு மற்றொரு காட்டிற்குப் போயிற்று. அக்காட்டிலே அரசன் உல்லாஸமாய் உலாவும் அரண்மனை ஒன்றுண்டு. அதனருகே அந்தக் கட்டில் கால் போனபோது "இந்த அரண்மனை இப்போது மிகவும் சிதிலமாயிருக்கின்றது. இனி அரசன் எப்பொழுதாவது இவ்வரண்மனையில் வந்து நுழைவாராஞல், நுழைந்தவுடனே இது இடிந்து அவர் தலையில் விழுந்து அவரைக் கொன்றுவிடும்; இந்த அரண்மனையைக் கட்டின பாபமேயொழிய பின்பு ஒருபோதும் அவர் இதைப் பழுதுபார்த்ததில்லை. அதன் பயனை இப்போது அடையப்போகிருர்" என்று ஒரு ஆகாசவாணி சொல்லிற்று. அவ்விடத்திற்போயிருந்த கட்டில்கால் அந்த அசரீரிவாக்கைக் கேட்டு மிகவும் பயந்து உடனே ராஜமாளிகைக்கு வந்து, நடுக்காட்டில் ஆகாசவாணி சொல்லிய செய்தியைத் தன் தோழர்களான மற்ற மூன்றுகால்களுக்கும் சொல்லி, இப்போது நான் ராஜாவாயிருப்பேனாஞல், இந்தக்ஷணமே அந்த மாளிகையை இடித்துத் தள்ளிவிடும்படி கட்டளைசெய்துவிடுவேன். அது மிகவும் சிதிலமாகி, அரசன்

எப்போ வரப்போகிருரென்று அவர் தலையில் வீழ்ந்து கொல்லக் காத்திருக்கிறதே என்று சொல்லிற்று. கட்டிலின்மேல் படுத்துத் தூங்காமலே அரசன் அதையெல்லாம் கேட்டுக்கொண்டேயிருந் தான். அச்செய்தி வாஸ்தவமே. அவ்வரண்மனை கட்டியதுதான் தெரியும்; பின்பு அதை ஒருபோதும் பழுதுபார்த்ததேயில்லை. அரச னும் அதை முற்றும் மறந்துவிட்டான். அவ்விடத்துக்கு அவன் போனதேயில்லை.

அதற்குப்பிறகு மூன்ருவதுகால், இப்போது நான் வெளியே போய் அங்குள்ள விநோதங்களைப் பார்த்துவிட்டு வருகிறேன். நீங் கள் மூவரும் அரசர்க்கு அபாயம் வராதபடி கட்டிலைக் காத்துக் கொண்டிருங்கள் என்று சொல்லிச் செலவுபெற்றுக்கொண்டு மற் ருெரு காட்டிற்குப் போயிற்று. அக்காட்டிலே ஒரு ஆண்டி குடி கொண்டிருந்தான். அதற்கருகே ஒரு சத்திரமுண்டு. அதில் ஒரு பெண்பிள்ளை வாஸம்பண்ணிக்கொண்டிருந்தாள். அவள் ஒரு போர்ச்சேவகனுடைய மனையாள். அந்தச் சேவகன் அவளை அச் சத்திரத்திலே விட்டு ஒரு வருஷத்திற்குமுன்னே தேசாந்தரம் போய் விட்டான். அவளுக்கு அக்காட்டிலிருந்த ஆண்டியினிடத்தில் ஆசை அதிகம். நாள்தோறும் இராத்திரி அவள் அவனிடத்திற்குப் போய் நெடுநேரம் அவனுடன் பேசிக்கொண்டிருப்பாள்.

அப்படியிருக்க அன்றையதினந்தான் தேசாந்தரம்போயிருந்த அவளுடைய கணவன் திரும்பி வீட்டிற்கு வந்தான். அதனுல் அன்றிராத்திரி அவள் அந்த ஆண்டியினிடம்போகச் சிறிது நேரமாகி விட்டது. நாழிகைசென்று வரக்கண்டு ஆண்டி அவளிடத்தில் சிறிது வெறுப்புற்றவனுகி, இன்றையதினம் நீ இவ்விடம் வருவ தற்கு ஏன் இவ்வளவு தாமதம்! என்று கேட்க; அவள், இது அடி யாளுடைய தப்பிதமன்று. ஒரு வருஷகாலமாய் வெளியே போயி ருந்த என் கணவன் இன்றையதினம் திரும்பி வீட்டுக்கு வந்தான். அவனுல் இந்நேரம் தாமதப்பட்டுப்போயிற்று; மன்னிக்கவேண்டு மென்ருள். அதுகேட்டு அந்த ஆண்டி, நல்லது, உனக்கு உன் கணவனிடத்தில் பிரீதி அதிகமா, என்னிடத்தில் அதிகமா? என்று வினவ, அந்தப் பொல்லாச் சிறுக்கி, இதைக் கேட்பானேன்? உம்மி டத்திலேதான் பிரீதி அதிகம் என்ருள். அப்படியானுல் நீ இந்தக்ஷ ணமே வீட்டுக்குப்போய் உன் கணவனுடைய தலையை வெட்டிக் கொண்டுவந்து என் கண்ணெதிரில் காட்டவேண்டும் என்ருன்.

அப்படியே ஆகட்டுமென்று அந்தக் கொலைபாதகியானவள் உட னே தான் குடியிருந்த சத்திரத்திற்குப் போய், அங்கே படுத்து நித் திரைசெய்துகொண்டிருந்த கணவனுடைய கழுத்தைக் கிஞ்சித்தே னும் கூச்சமில்லாமலும், தன்னைக் கைபிடித்த கணவனென்ற கண் ணேட்டமில்லாமலும் ஒரேவெட்டாக வெட்டித் துண்டித்துக்

கொண்டுபோய், தன்னிடத்தில் ஆசைகொண்டவன்போல நடித்த ஆண்டியின் எதிரிலே வைத்துவிட்டு நின்றாள். அதைப்பார்த்தவுடனே அவன் அவளிடத்தில் அதிக கோபங்கொண்டவனாகி, ஆ! கொலைக்கஞ்சாத கொடும்பாவி, யாரோ வழிப்போக்கனான என் பேச்சைக்கேட்டுக் கைபிடித்துக் கலியாணம்செய்துகொண்ட கணவனைக் கொல்லத் துணிந்த நீ இனி எந்தப் பாதகம் செய்யத்தான் பின்வாங்குவாய்? உன்னைப் பார்த்தாலே பழி சூழ்ந்துகொள்ளும். உடனே ஓடிப்போ; நிமிஷங்கூட என்னெதிரில் நிற்காதே என்று சொல்லி அவளை உடனே அவ்விடத்திலிருந்து துரத்திவிட்டான். ஆ! பெண்டுகளுடைய கடுநெஞ்சை என்னென்று சொல்லலாம்! அக்கொடியவள், நமது தலைவிதி இப்படியாயிற்றென்று அவ்வளவோடாவது அடங்கிப்போகாமல், அற்றுப்போன தன் கணவன் தலையைத் தூக்கிக்கொண்டுபோய் அவன் முண்டத்தோடு பொருத்திவிட்டு, கோவென்று கதறப் புறப்பட்டாள். அந்தச் சத்திரத்திலுள்ளவர்களெல்லாரும் ஓடிவந்து என்னவிசேஷமென்று கேட்க, அவள், கள்வர்கள் அநேகர் வந்து என் கணவனைக் கொன்றுவிட்டு ஓடிப்போனார்கள் என்று சொல்லிப் பின்னும் ஓயாமல் புலம்பினாள். அங்கே போயிருந்த மூன்றாவது கட்டில்கால் இந்த ஆச்சரியங்களையெல்லாம் பார்த்துவிட்டுத் திரும்பி அரண்மனைக்கு வந்து அதன் வாலாறுகளையெல்லாம் மற்ற மூன்று கால்களுக்கும் சொல்லிற்று. இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டே அரசன் இன்னும் கண் விழித்திருந்தான்.

மூன்று கால்களும் வெளியேபோய் வேடிக்கைபார்த்துவிட்டு வரவே நான்காவது காலுக்குத் தானும்போய் வேடிக்கை பார்க்க வேண்டுமென்ற ஆவலுண்டாயிற்று. அதனால் கடைசியாய் அதுவும் மற்ற மூன்றுகால்களினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு மற்றொரு காட்டுக்குப் போயிற்று. அக்காட்டில் கள்ளர்கள் ஏழுபேர் இருந்தனர். அவர்கள் அப்போதுதான் அரசன் அரண்மனைக்கு வந்து அங்கே கட்டிலின்மேல் படுத்துக் கண்வளர்ந்துகொண்டிருந்த ராஜகுமாரியை அவ்வண்ணமே தூக்கிக்கொண்டுபோய் வைத்திருந்தார்கள். அந்தப் பெண் அப்போதும் அப்படியேதான் மெய்மறந்து தூங்கிக்கொண்டிருந்தாள். மேலும் அக்கள்ளர்கள் அரசனுடைய தனசாலைக்கும் போய் அங்கிருந்த திரவியங்களையும் அபகரித்துக்கொண்டு வந்துவிட்டார்கள். அவ்விடத்திற்குப் போன நான்காவது கட்டில் கால் அச்செய்திகளையெல்லாம் பார்த்துவிட்டுச் சீக்கிரமே அரண்மனைக்குத் திரும்பிவந்து மற்ற மூன்றுகால்களையும் பார்த்து, தோழர்களே, நமது மகாராஜா மிக புத்திமானாயிருந்தால் இவர் உடனே எழுந்து வடபுறத்துக்காட்டுக்கு ஓடவேண்டும். அங்கே சில திருடர்கள் நமது ராஜகன்னிகையையும், இவ்வரண்மனையிலிருந்து திருடிக்கொண்டுபோன அளவற்ற திரவியங்களையும்

வைத்துக்கொண்டிருக்கிறார்கள். உடனே எழுந்தோடினால் சொத்துங்கையுமாய் அவர்களைத் தடையின்றி பிடித்துக்கொள்ளலாம் என்றது.

அந்த வார்த்தையைக் கேட்டதக்ஷணமே அரசன் எழுந்து தன் சேவகர்களையும் சில போர்வீரர்களையும் கூட்டிக்கொண்டு காட்டுக்குப் போகப் புறப்பட்டான். புறப்படும்போது முதலாவது கட்டில்கால் சொன்ன பேச்சை நினைத்துத் தன் பாதரக்ஷையைத் தூக்கித் தட்ட, அதினின்றும் ஒரு பாம்பு சுருட்டிக்கொண்டு கீழே விழுந்தது. (மற்றொரு பாம்பு அரண்மனைக்கு வராமல் அப்படியே காட்டுக்கு ஓடிப்போய்விட்டது.) இதனால் முதல் கட்டில்கால் சொன்னபேச்சு உண்மையென்று அரசனுக்குத் தெளிவாய்த் தெரிந்தது.

அவன் காட்டிற்குப் போனபோது அங்கே நான்காவது கட்டில்கால் சொன்னபடியே திருடர்கள் தன் மகளையும் திரவியங்களையும் வைத்திருக்கக் கண்டு, பெண்ணையும் பொருளையும் அப்படியே அரண்மனைக்குக் கொண்டுவந்தான். அரசன் மகள் அப்போதும் தூங்கிக்கொண்டிருந்தாள்; தனக்கு இவ்விதமான ஆபத்து நேரிட்டதென்று அவளுக்குச் சிறிதும் தெரியாது. இதனால் நான்காவது கால் சொன்ன பேச்சும் உண்மையாயிற்று. அந்தத் திருடர்கள் மட்டும் அவன் கையில் அகப்படவில்லை; பல போர்வீரர்களோடு அரசன் வரக்கண்டு மூலைக்கொருவராய் அவர்கள் ஓடிப்போனார்கள்.

பின்பு அரசன் தனது பழைய அரண்மனையை இடித்துவிடும்படி பல வேலைக்காரர்களை அனுப்பினான். அவர்கள் போனபோது அது தானே இடிந்துவிழக் காத்திருந்தது. அப்போது யாராவது உள்ளே நுழைந்திருந்தால் அவன் அந்தக்ஷணமே அதன்கீழ் அகப்பட்டுக்கொண்டு நசுங்கிப்போயிருப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. அதைக் கண்டு இரண்டாவது கால் சொன்னதும் உண்மையேயெனத் தெரிந்துகொண்டார்கள்.

மறுநாள் அரசன் ராஜசபையில் உட்கார்ந்திருந்தபோது, இராத்திரி பல திருடர்கள் வந்து சத்திரத்தில் ஒரு போர்வீரனைக் கொன்றுவிட்டதாக முறையிட்டார்கள். அதுகேட்டு அரசன் அந்தப் போர்வீரனுடைய மனைவியை வரவழைத்து, உன் கணவனைக் கொன்றது யாரென்று விசாரிக்க, அவள், கள்ளர்கள் வந்து கொன்றுவிட்டார்கள் என்றாள். அதைக் கேட்கவே அரசனுக்கு அவளிடத்தில் அதிக கோபமுண்டாயிற்று. ஏனெனில், மூன்று கட்டில் கால்களும் சொன்ன பேச்சு உண்மையாயிருப்பதனால் மற்றொரு கால் சொன்ன பேச்சும் உண்மையாகவே இருக்குமென்று அவன் உறுதியாக நம்பினான். அதனால் கொலையுண்டுபோன வீரனுக்கு நடத்தவேண்டிய கிரியைகளையெல்லாம் கிரமமாக நடத்தும்படி திட்டம்செய்து, உடனே நடுக்காட்டில் ஒரு பெருந்தீ வளர்த்தி

அதில் கொலேக்கஞ்சாத பெரும்பிரவியான அக்கொடியவளைத் தள்ளி எரித்துவிடக் கட்டளேயிட்டான்.

பிறகு இப்படிப்பட்ட அற்புதமான கட்டிலொன்றைக் கொடுத்துத் தன் உயிரைக் காத்த கனவானுன சூடாமணியை வரவழைத்துத் தன் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு, குழந்தாய், உன்னுடைய கட்டிலில்லாவிட்டால், இன்று நான் பாம்புகடித்து இறந்துபோயிருப்பேன். ஒருவேளே அதற்குத் தப்பினுலும், பழைய அரண்மனே இடிந்து தலேயில் விழ அதற்குத் தப்பாமல் அவசியம் மாண்டுபோயிருப்பேன். இதற்குமுன், அது அவ்வளவு அபாயஸ்திதியிலிருக்கின்றதென்பது எனக்குத் தெரியாது. என் மகளும் அநியாயமாய்த் திருடர் கையில் அகப்பட்டுப்போயிருப்பாள். இந்தப் படுபாவியான பெண்பிள்ளேயும் பிழைத்திருக்கும்படியாகும். இப்படிப்பட்ட தீமைகள் ஒன்றும் நேரிடாமல் நான் உன் கட்டில் கால்களால் காக்கப்பட்டேன். ஆதலால் உன்னிடத்தில் எனக்கு அபரிமிதமான அன்பு உண்டாயிற்று. நாளேயதினம் முழுதும் நீ எத்தனே வண்டிகள் ஓட்டிக்கொண்டு வந்தாலும், அவைகளில் நீ கொண்டு போகக்கூடிய திரவியம் நான் உனக்குத் தருகிறேன் என்றுன்.

அப்படியே ஆகட்டுமென்று சூடாமணி மறுநாள் காலேயில் அளவற்ற வண்டிகளே ஓட்டிக்கொண்டுவந்து ஒவ்வொரு வண்டியிலும் வேண்டுமளவு பொன் வெள்ளி நாணயங்களும் ஆடையாபரணங்களும் ஏற்றிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தான். அந்த வண்டிகளேப் பார்த்தபோது அவன் மனேயாளுக்கு உண்டான ஆநந்தத்துக்கு அளவில்லே. "என் பிராணநாதர் ஒரே ஒரு வாரந்தான் வருந்தி வேலேசெய்தாராயினும் அதனுல் அளவற்ற பொருள் சம்பாதித்துவிட்டார்" என்று மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். பின்பு அவர்கள் அந்தத் திரவியத்தைக்கொண்டு வேண்டிய காணி பூமிகளும் தோட்டம் துரவுகளும் வாங்கிக்கொண்டு வெகு சுகமாக நெடுநாள் களிப்புற்றிருந்தார்கள்.

பெரியோர் சரித்திரங்களாலாகும் பெரும்பயன்.

அவரவரைக் குறித்தெழுதும் சரித்திர புஸ்தகங்களின் முக்கியமான நோக்கமாவது, ஒழுக்கத்திற்கு உத்தம நிதர்சனமாக விளங்கும் வாலாறுகள் திரளாய் அமைந்திருக்க வேண்டுமென்பதேயாம். மகிமைபெற்றவராகிய நமது முன்னேர்கள் இறந்து நெடுநாளாயினும், அவர்கள் தமது சரித்திரவடிவமாயும் அவர்கள் செய்த செய்கைகளின் வடிவமாயும் அழியாது இன்னும் நம்மோடு வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள். அவர்கள் இன்னும் நமது மருங்கில் போஜ

னபந்தியில் உட்காருகிருர்கள்; நமது கையைப்பிடித்து நடத்திக் கொண்டுபோகிருர்கள்; நாம் இன்னும் தெரிந்துகொள்ளாத பல சிறந்த விஷயங்கள் நமக்கு நன்ருய் விளங்கும்படி நிதர்சனங்களும் அநேகம் நடத்திக்காட்டுகிருர்கள். உத்தமபுருஷன் எவனெவன் சரித்திரம் எழுதியிருக்கின்றதோ அவனவன் தம் பின்ளுேர்க்கு என் றும் நலம்தரும் சாதனத்தைச் சொந்தமாய் எழுதிக்கொடுத்திருக்கி ருன். எப்படியெனில் அவன் சரித்திரமானது என்றென்றைக்கும் பிறர் தம் ஒழுக்கத்திற்கு நல்லுருவமைய அனுசரிக்கத்தகும் அச் சாயிருக்கின்றது. அது மனிதருக்குள் ஒருவிதமான உற்சாகத்தை உண்டாக்கி அவர்கள் உலகவியாபாரத்தை நூதனமாய்க் கைக் கொண்டு நல்லொழுக்கத்தில் ஒழுகுவதற்கு உதவுகின்றது. ஆக வே, உத்தமபுருஷன் ஒருவனுடைய சரித்திரபுஸ்தகமானது விலையு யர்ந்த வித்துகள் நிறைந்துள்ள பெட்டிபோன்றது. மேலும் அது என்றும் அழியாத சப்தமாகி அனைவர்க்கும் புத்திகூர்மை உண்டாக் குகின்றது. மில்த்தன் என்னும் கவிஞர் மொழிந்தபடி, அது இவ் வுலக வாழ்க்கைக்குப்பின் பேரின்பவாழ்வு அடையும்பொருட்டு வாதனையிட்டு க்ஷேமித்துவைத்திருக்கின்ற ஒரு பரமார்த்தமாம். இவ் வகைப் புஸ்தகங்கள் இடையருதெப்பொழுதும் மனிதனை உயர்த்தி உத்தமபதம் அடைவிக்கும் பக்குவம் வருவித்துக்கொண்டிருக்கின் றன. ஆனுல், யாவற்றிற்கும் மேலாய், இம்மையில் நம் ஒழுக்கத் திற்கு உரு அமையும்படி நமக்குமுன் வைத்திருப்பதும், அறிவு இதயம் இவற்றின் தேவையனைத்திற்கும் மிகவும் ஏற்றதுமான நிதர்சனங்களடங்கிய புத்தகமொன்றுண்டு: அந்த நிதர்சனமானது, சூரியனை ஒருபொழுதும் கண்ணுற்காணுமல் கனக்கண்டு, அவன் இருப்பிடம் எங்கென்று உத்தேசித்துத் தம்மால் இயன்றமாத்திரம் சூரியனிடத்திற்கு ஏறிப்போய்ச்சேர எத்தனம்செய்யும் பூண்டுசெடி கொடிகளைப்போல, நெடுந்தூரத்தில் நின்று நாம் அனுசரித்துப் பின் னிட்டு அனுபவபூர்வமாய்க் காணத்தக்கதாம்.

மேலும், பக்ஸ்தன் ஆர்னல்ட் முதலானவர்களுடைய சரித்திர புஸ்தகங்களை வாசிக்கும் வாலிபன் எவனும் அப்புத்தகங்களை வை த்து எழுந்திருப்பதற்குமுன்னமே, அதனுல் தன் யுத்தியும் புத்தியும் திருந்தியதையும், தன் உத்தமமான எண்ணங்கள் பலப்பட்டதை யும் உறுதியாய்க் கண்டுகொள்வான். இவ்வகைச் சரித்திரபுஸ்த கங்கள், மனிதர் எத்தன்மையுடையோர் ஆகமாட்டுவாரென்றும், என்னசெய்யமாட்டுவார் என்றும் வாசிப்பவனுக்குத் திர்ஷ்டாந்த பூர்வமாய்க் காட்டி அவன் ஆசைகளை அரணுக்கிப் பூலோகவிவகார நோக்கங்களை உயர்த்தி, தன்பலமே தனக்குதவும் எனும் மனவுறு தியை விருத்திசெய்யும். மைகெல் அங்கிலோ என்பவருடைய செய்கைகளைச் சிந்தனைசெய்த சமயத்தில் கொரெக்கியோ என்ப வன் தனக்குள்ளே விவேகம் எழுவதை உள்ளூற அறிந்து "நானும்

சித்திரம் எழுதும் சிற்பியானேன் எனக் கூறியபடி, சில சமயங்களில் வாலிபர்களும் தாம் வாசிக்கும் சரித்திரபுஸ்தகங்களால் தமக்கு மிகத் திறமை விளங்கக்காண்பார்கள். ஸ்ரீ ஸாம்யுயெல் ராமிலி என்பவர் தம்மைக்குறித்தெழுதிய சரித்திரபுஸ்தகத்தில், மகத்துவமும் உதாரமதியுமுள்ள பிரான்சிய அரசிறைக்கணக்காகிய டகூஸ்ஸோவின் சரித்திரம் தம்மை வலிமையாய்ப் பரவசப்படுத்தியதென்று அறிக்கைசெய்தார். அவர் சொல்லிய வாக்கியமாவது:—“தோமாஸ் பண்டிதர் இயற்றிய கிரந்தங்கள் என் கையில் அகப்பட்டன. அவர் டகூஸ்ஸோவைப் புகழ்ந்தெழுதிய புஸ்தகத்தை வியப்பொடு வாசித்தேன். அந்தப் பிரபலரான அதிகாரி ஒழுகியதாக மேற்படி கிரந்தாசிரியர் மொழிந்த கௌரவநெறி என் ஆவலையும் ஆசைப்பெருக்கத்தையும் மிகவும் எழுப்பிவிட்டு, மகிமை அடைதற்கு நூதன மார்க்கங்களை என் மனக்கண்ணுக்குத் திறந்து காட்டியது” என்று கூறியிருக்கிறார்.

ப்ராங்க்லின் என்பவர் தாம் நால்வருக்கும் உபகாரியாகத்தக்க நிலையும் உயர்பதவியும் பெற்றது காட்டன் மாதர் என்னும் வித்வான் எழுதிய ஒரு புஸ்தகத்தை இளமையில் வாசித்ததனாலேதான் என்று சொல்லிவருவார். மாதர் நின்றநெறியே அந்த நூலின் உற்பத்திக்கு மூலமாயிற்று. ஆ! நல்ல நிதர்சனமானது தற்காலத்தில் உள்ளவர்களைமாத்திரமேயன்றிப் பிற்காலத்துப் பிரஜைகளையும் சீர்திருத்தித் தன் வசப்படுத்தக் காத்திருக்கின்றது பாருங்கள். தமது ஒழுக்கத்திற்கும், முக்கியமாய்த் தொழிற்றுறைகளுக்கும் உரு அமைந்தது பெஞ்ஜமின் ப்ராங்க்லின் எழுதிவைத்திருக்கின்ற அச்சின்படியென்று ஸாம்யுயெல் ட்ரூ உறுதிமொழி கூறுகிறார். ஆகவே நல்ல நிதர்சனம் எட்டாதவிடம் இன்னதென்றும், அதற்கு முடிவுண்டெனில் அம்முடிவு இவ்விடத்திலென்றும் சொல்வதசாத்தியமாம். ஆனதுபற்றியே, கல்வியிலானாலும் சரி ஒழுக்கத்திலானாலும் சரி, நல்லினம் சேர்வதனாலும், நல்லநூல்களை வாசிப்பதனாலும், அவைகளில் விளங்கும் உத்தமமான விஷயங்களைப் புத்திபூர்வமாய் வியந்து அனுசரிப்பதனாலும் சிறந்தபயன் உண்டாகின்றது. “வித்தியாப்பியாச விஷயத்தில், முக்கியமாய் ஆதியில் எனக்கு அறிமுகமானவர்களால் ஆகிய நல்லினத்தைப் பிராணபதமென நம்பிச்சேர ஆசைகூர்ந்திருக்கிறேன். அவர்களோடு பின்னும் நெருங்கி நட்புகொள்ள நான் மிகவும் விரும்புகிறேன். ஒருகால் வாசித்த புஸ்தகத்தை மறுகால் வாசிப்பது ஒருவேளை மனதிற்கு இன்பந்தராதாயினும், முன் வாசித்திராத புஸ்தகத்தை வாசிப்பதிலும் வாசித்த புஸ்தகத்தையே மீளவும் பலகால் வாசிப்பது மிகவும் நன்மைவிளைவிக்கத்தக்கது என்று எண்ணுகிறேன்” என ஒரு பிரபு கூறுகிறார்.

ஒழுக்கத்திற்கு உத்தம நிதர்சனமான புஸ்தகத்தையெடுத்துப்

பொழுதுபோக்காய் மேலெழுந்தவாரியமாக வாசித்தவர்களுக்கும் சில சமயங்களில் முன் உண்டெனக் கனவிலும் தோன்ருத மனவலிமைகள் அவ்வாசிப்பினல் வெளிப்பட்டதாகத் தெரியவருகின்றன. அல்பியிரி ஆதியில் காதலோடு கல்விபயில நேர்ந்தது ப்லூதார்க்கு என்பவருடைய சரித்திரபுஸ்தகம் வாசித்ததனுலேயே. இப்படியே ஒருவன் ராணுவசேவகம்செய்து, காலில் படுகாயம்பட்டுக் கிடைப்பாடாயிருக்கையில் நோவை மறக்கடிக்கும்படி வாசிக்க ஒரு புஸ்தகம் கேட்டதற்கு, சிறந்த ஒரு சரித்திர புஸ்தகத்தைக் கொடுத்தார்கள். அவன் அதை வாங்கி வாசித்து அதனுல் அடங்காவாசை நெருப்புமூண்டு சுவலிக்க, அன்றுதொட்டுத் தானும் அதிற்கூறியபடி நடக்கவேண்டிய முயற்சியை விரதமாய் அனுஷ்டித்துவரத் தீர்மானித்தான். இவ்வண்ணமே அநேகர் பூர்விகர்களுடைய நீதிநெறி நல்லொழுக்கங்கள் விளங்க எழுதிய சரித்திரங்களைப் படித்துத் தேர்ந்து மிகப் பிரசித்திபெற்று வாழ்ந்திருக்கிருர்கள்.

தம்மை மிகவும் தேற்றிப் பரவசப்படுத்திய புஸ்தகங்களைத் தின சரிதையிலும் கடிதங்களிலும் குறித்துவைப்பது ப்ரான்ஸிஸ் ஹார்னர் வழக்கம்.

பெருமையிற் சிறந்த சித்திரமெழுதுவோரொருவரைக்குறித்து எழுதிய வாலாறுகளை வாசித்தே தமக்கு முதலில் சித்திரவித்தையின்பேரில் ஆசைபிறந்ததென்று ஒருவர் சொன்னது நாம் மிகுந்த கவனத்துடன் கேட்டுக் கொண்டாடத்தக்க விஷயமாம். ஹேடெனும் இவ்வாறே பிற்பாடு ரேனல்ட்ஸ் சரித்திரத்தை வாசித்துச் சித்திரத் தொழில்செய்யும் ஆசைத்தீயுடையவரானுர். ஆகவே, தீரமும் உயர்பதம் பெறவேண்டுமென்னும் அவாவுமுள்ள ஒருவனுடைய சரித்திரம் அவனைப்போலும் கருவிகரணங்களும் முயற்சியுமுள்ள பிறர்நெஞ்சில் அவ்வாசைத்தீயைப் பற்றவைத்துச் சுவலிப்பிக்கும்; "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்றபடி, முயற்சிசெய்வோர்க்கு அம்முயற்சியின் அளவுக்கேற்ற பெருமையும் பயனும் விளையுமென்பதற்கு ஐயமில்லை. ஒன்றைக்கண்டு வியப்புண்டாகும்போது அதைப்போலத் தாமும் அனுசரிக்கவேண்டுமென்னும் அவாவும் அறிவும் உண்டாவதால், பெரியோர்களுடைய சரித்திரங்களைப் பார்க்கப்பார்க்க அனைவர்க்கும் அவற்றினிடத்தில் ஒரு உற்சாகமுண்டாக, அதுகாரணமாய் நன்னெறி நல்லொழுக்கங்கள் விடாமல் ஒருவரைவிட்டு ஒருவர்க்குத் தொடர்ந்துகொண்டு காலமுள்ளளவும் நீடித்துக்கொண்டேயிருக்கும். ஆதலால் பெரியோர் சரித்திரங்களால் விளையும் பயன் மற்றெதனுலும் இல்லை.

சிறுவர்க்கான கதை.

நாயும் பூனையும்.

பூனைகளெல்லாம் புலிகளுக்கு அத்தையென்று வைத்துக்கொள்வோம். இக்கதையில் வருகிற பூனையும் இக்கதையில் வருகிற புலிக்கு அத்தையாம். அப்புலியின் தாய் இறக்கும்சமயத்தில் பூனையை அழைத்து, அம்மா, நான் இறந்துபோனபிறகு நீதான் என் குழந்தையை ஜாக்கிரதையாய்க்காப்பாற்றவேண்டுமென்று சொல்ல, பூனையானது, அப்படியே ஆகட்டுமென்று அதற்கு அங்கீகரித்தது. உடனே அந்தப் புலி இறந்துபோயிற்று. பின்பு அந்தப் புலிக்குட்டியானது ஒருநாள் பூனையைப் பார்த்து, அம்மா, எனக்கு அதிக பசியாயிருக்கிறது; சமைப்பதற்குக் கொஞ்சம் நெருப்பு வாங்கிக்கொண்டுவா; நான் போனால் என்னைப் பார்த்து மனிதர்கள் பயந்தோடிப்போவார்கள். அப்படியன்றி நீ சிறிய பிராணியாகவும், மனிதர்களோடு பழகியதாயும் இருப்பதால் மனிதர்கள் உன்னைப் பார்த்துப் பயப்படாமல் உனக்கு நெருப்புக் கொடுப்பார்கள். சீக்கிரம் போய் வாங்கிக்கொண்டுவா என்றது. அதுகேட்டுப் பூனை அப்படியே ஆகட்டுமென்று சொல்லி, சமீபத்திலிருந்த ஒரு வீட்டிற்குப் போயிற்று. அவ்வீட்டிலுள்ளவர்கள் அப்போது போஜனம் செய்துகொண்டிருந்தார்கள். அவ்விடத்திற்குப் போன பூனை தான்போன காரியத்தைப் பார்ப்பதைவிட்டுக் கீழே சிந்துகிற உணவுகளை எடுத்துத்தின்ன ஆரம்பித்தது. அந்த வீடு புலியிருந்த காட்டுக்கு அதிக தூரமன்று. அவ்வீட்டில் பூனை நெருப்பு வாங்கிக்கொள்ளாமல், கீழே சிந்தும் உணவுகளையெடுத்துத் தின்றுகொண்டிருப்பது காட்டிலிருந்த புலிக்கு நன்றாய்த் தெரிந்தது. அதைப் பார்த்துப் புலி, ஆ! நாம் சொன்னவேலை ஒன்றிருக்க இந்தப் பூனை தன் வயிற்றுவேலையைப் பார்த்துக்கொண்டிருக்கிறதே! நம்முடைய பசி அதற்குச் சிறிதும் தெரியவில்லை பார்த்தாயாவென்று, உடனே ஓடிவந்து பூனையைப் பார்த்து, அம்மா நான் உன்னை அனுப்பின காரியமென்ன? நீ இப்போது செய்துகொண்டிருக்கிற வேலையென்ன? உன் பசியே உனக்குப் பெரிதாய்ப்போயிற்றே! இதோ நான் ஓடிவந்து உன்னைக் கொன்றுதின்று பசியாறுகிறேன் பார் என்றது. அதைக் கேட்டவுடனே பூனை மிகவும் பயந்து, இனி நாம் ஒருபோதும் புலி

யினிடம் போகக்கூடாது. போனால் அதன் வாய்க்கு இரையாய்ப் போவோமென்று கூவிக்கொண்டே ஓடிப்போய்விட்டது. புலியி னிடத்திலாவது புலியைப்போன்ற மற்றெந்த மிருகங்களிடத்திலா வது பூனைகள் இப்போது பயங்கொண்டிருப்பதற்கு இதுதான் கார ணமாம். பின்வரும் கதையில் புலி ஒரு மனிதனோடு சண்டைபோட் டுக்கொண்டிருக்கக் கண்டு பூனை இதேகாரணத்தினாலேதான் பயந்து ஓடிப்போயிற்றென்கிறார்கள்.

முன் ஒரு காலத்தில் ஒரு வீட்டிலே நாயும் பூனையுமிருந்தன. வெளியே போவதற்கில்லாமல் ஒருநாள் மழைபெய்துகொண்டிருந் தபோது, அவ்வீட்டிற்குள் சிலர் புசித்துக்கொண்டிருக்கையில், அவர்கள் எறிந்த சோற்றைத் தின்றுகொண்டு பூனை உள்ளேயே உட் காந்திருந்தது; நாயோ வீட்டுக்கு வெளிப்புறத்திலே வாயைத் திறவா மல் படுத்திருந்தது. அப்போது பூனை நாயைப் பார்த்து, நான் மிக வும் உயர்ந்த ஜாதியில் சேர்ந்திருக்கிறேன்; நீ மிகவும் ஈனஜாதி மிரு கம் என்றது. அதுகேட்டு நாய், ஆ! என்ன சொல்லுகிறாய்? அப்படி ஒருபோதும் இல்லை. நானே உயர்ந்தஜாதி, நீதான் ஈனஜாதி; மனி தர்கள் புசிக்கும்போது நீ புத்தியில்லாமல் மேல்விழுந்து அவர்களு டைய கைச்சோற்றைப் பிடுங்கித்தின்கிறாய்; மேலும் நன்றியில்லா மல் அவர்களைப் பீறுகிறாய்; பின்பு அவர்கள் உன்னை உதைக்கிறார் கள். நானோ ஒரு பெரியமனிதன்போலப் பெருமையாய்த் தனிப் புறத்தில் இருக்கிறேன். மனிதர்கள் என்னை ஒருபோதும் அடிப்ப தில்லை. அவர்களே இஷ்டப்பட்டு ஏதாவது உணவுகொடுத்தால் நான் புசிப்பேன்; இல்லாவிட்டால் இல்லையென்றது.

அதற்குப் பூனை, ஓ! நீ சொல்வது ஒருபோதும் ஒவ்வாது. மனிதர்கள் புசிக்கிற உத்தமமான போஜனங்களை நான் புசிக்கிறேன்; நீயோ அவர்கள் எறிந்துவிட்ட அற்பமான உணவுகளைத் தின்கிறாய் என்று சொல்ல, நாயானது, எது எப்படித்தானிருக்கட்டும்; நான் உத்தமஜாதி; நீ தாழ்ந்த ஜாதிதான். இப்பொழுது நான் ஒரு உதை உதைத்தால் நீ ஐந்துகாதவழிக்கு அப்பால் போய் விழவேண்டாமா என்று பயங்கரமாய்க் கூவ, பூனை, நீயாவது என்னை உதைக்கவாவது என்றது.

இவ்வண்ணமே அந்த மிருகங்களிரண்டும் ஒன்றின்மேலொன் றாய்ப் பேச்சுவளர்ந்து வாக்குவாதம்செய்து கலகம்செய்யத் தொடங் கின. கடைசியில் நாயானது பூனையைப் பார்த்து, நாம் தனியே

இப்படி கலகப்படுவதில் பயனில்லை. மிகவும் புத்திசாலியான குள்ள நரியை மத்தியஸ்தம் கேட்டுச் சந்தேகம் தெளிவோமென்று சொல்ல, பூனையும் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டது. அதன் படியே அவையிரண்டும் ஒரு குள்ளநரியினிடம்போய்ச் சேர்ந்தன. நரியைப் பார்த்தவுடனே பூனையானது, பூனைகள் உயர்ந்த ஜாதியென் றும், நாய் ஈனஜாதியென்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன்; அதைப்பற்றி உன் அபிப்பிராயமென்ன என்று கேட்டது. அப்படி யன்று; நாய்தான் உயர்ந்தஜாதி; நீயே ஈனஜாதியென்று நரி சொல்ல, அதற்குப் பூனை, அப்படியல்லவென்றது கேட்டு, நரி, அப்படித்தா னென்றது. அதனால் அவ்விரண்டுக்கும் கலகமுண்டாகியது.

அதுகண்டு நாயும் நரியும், இக்கலகம் நம்மால் தீர்க்கத்தக்க தன்று. பெருங்காட்டிற்குப் போய் அங்குள்ள புலியைக் கேட்டுத் தான் தெளியவேண்டுமென்று ஆலோசித்துச் சொல்ல, பூனையானது, ஓ! புலியா! புலியினண்டை நான் ஒருபோதும் வரமாட்டேன் என்று பயந்து கூவிற்று. அதுகேட்டு நாயும் நரியும், நீ பயப்படவேண் டாம்; நாங்கள் முன்னேபோய்ப் புலியின் எதிரில் நிற்கிறோம்; நீ எங்களுக்குப் பின்னே பதுங்கிக்கொண்டிரு. எல்லாச் செய்திகளை யும் நாங்கள் புலியோடு பேசித் தெளிகிறோம் என்றன. அப்படி யே அந்த மூன்று மிருகங்களும் புறப்பட்டு ஒரு பெரும்காட்டுக் குப் போயின. அங்கே ஒரு பெரும்புலி காலில் முள்தைத்து வேதனை பட்டுக்கொண்டு வீழ்ந்துகிடந்தது. அதைச் சிறிது தூரத்திலிருந்து பார்க்கும்பொழுதே பூனை மிகவும் பயந்து ஒரே தாவாய்த் தாவி வீரிட்டுக்கொண்டு ஓடிப்போய்விட்டது.

காலில் தைத்த முள்ளினால் அந்த மிருகம் பட்டவேதனை இவ் வளவவ்வளவல்ல. காலில் அந்த முள்தைத்து நெடுநாளாகியும் அதை வாங்க ஒருவருமில்லாமையால், வெகுகாலமாய் அந்தப் புலி அங்கேயே விழுந்துகிடந்தது. இப்படியிருக்க ஒரு மனிதன் அவ் வழியாக வரக் கண்டு, அப்பா மகாராஜனே, என் காலில் தைத்திருக் கிற முள்ளைச் சற்று வாங்கிவிடு, நான் உனக்கு ஒரு தீங்கும்செய் வதில்லையென்று கையடித்துத் தருகிறேன் என்று சொல்லிப் புலி வேண்டிக்கொண்டது. ஆயினும் அம்மனிதன் அதனிடத்தில் போக பயந்து, உன் பேச்சை நம்பக்கூடாது, நான் மாட்டேனென்று சொல் லி மறுக்க, புலியானது வெகு வணக்கத்துடனே, ஒரு தீங்கும் செய்வ தில்லையென்று மூன்றுதரம் அவனுக்குப் பிரமாணம்செய்து கொடுத் தது. அதனால் அந்த மனிதன் புலியின் பேச்சை நம்பி அதனண் டைபோய் அதன் காலிலிருந்த முள்ளை வாங்கினான். உடனே புலி

அவன்மேல் பாய்ந்து, இதோ நான் உன்னைத் தின்றுவிடுகிறேன்; எனக்கு அதிக பசியாயிருக்கின்றது என்று பயங்கரமாய்க் கூவ, அதுகேட்டு அம்மனிதன், ஆ! என்ன? இப்படியும் பொய்பேசுகிறவர்கள் உலகில் உண்டா? உன் காலிலுள்ள முள்ளை வாங்கினால், நீ என்னைத் தின்பதில்லையென்று மூன்றுதரம் பிரமாணம்பண்ணிக் கொடுத்துவிட்டு, இப்பொழுது உன் காரியம் நிறைவேறிப்போன பிறகு புசிக்கிறேன் என்கிறாயா? இப்படிப்பட்ட நன்றியற்றவர்களும் உலகில் உண்டாவென்றான். அதன்மேல் அவ்விரண்டு பேர்க்கும் கலகமுண்டாயிற்று. கடைசியில் மனிதன் புலியைப் பார்த்து, நீ என்னைத் தின்னாது விடுவாயானால், நான் உனக்கு இரண்டு ஆடு கொண்டுவந்து தருவேனென, புலி, எனக்கு ஆடு எதுக்கு? நான் ஆட்டைத் தின்பதில்லை. உன்னைத்தான் தின்னவேண்டும்; பசித்தவர்களுக்குப் பாவமேது பழியேது என்று சொல்லிற்று.

இப்படியிருக்கும் தருணத்தில், நாயும் நரியும் அதனண்டை போய்ச் சேர்ந்தன. போனவுடனே நரி, என்ன விசேஷம்? ஏன் கலகப்படுகிறீர்களென்று கேட்க, அண்டையிலிருந்த மனிதன் தாங்கள் சண்டைபோடுவதற்குக் காரணமின்னதென்று உள்ளபடி உரைத்தான். அதைக் கேட்டவுடனே நரி புலியைப் பார்த்து, புலியாரே, நீங்கள் இதற்காக இவ்வளவு விசாரப்படுவானேன்? மனிதனைப் புசிப்பதற்கு நான் ஏற்ற உபாயம் ஒன்று சொல்லுகிறேன். உடனே போய்ப் பெரிய கோணிப்பை ஒன்று கொண்டுவாருங்கள் என்றது. அப்படியே புலி பெரிய பை ஒன்று கொண்டுவந்து நரியின் கையிற் கொடுத்தது. அதை வாங்கிக்கொண்டு நரி புலியைப் பார்த்து, நீங்கள் இதில் புகுந்து வாயைத் திறந்துகொண்டிருங்கள்; இம்மனிதனை நான் இதற்குள் தள்ளிவிடுகிறேன். இதற்குள் இருந்தபடியே நீங்கள் சுகமாய் புசிக்கலாம் என்று சொல்ல, ஆ! நீ சொல்வது நல்ல உபாயந்தானென்று புலி உடனே அந்தப் பைக்குள் புகுந்துகொண்டது. புகுந்தவுடனே நாயும் நரியும் மனிதனும் அந்தப் பையை நன்றாய் இறுக்கிக் கட்டிவிட்டு, கைகொண்டமட்டும் தடிகளையெடுத்து அடித்துக் கடைசியாய் அந்தப் புலியைக் கொன்றுவிட்டார்கள். அப்படி ஒரு ஏற்ற உபாயம் செய்து தன்னைத் தந்திரமாய் விடுவித்த நரியினிடத்தில் நன்றியுடையவனாகி அதற்கு வந்தனம்செய்து விடைபெற்றுக்கொண்டு மனிதன் சுகமாய்த் தன் வீடுபோய்ச் சேர்ந்தான். நாயும் சந்தோஷமாய் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தது. நரியும் தன் காட்டுக்கு ஓடிப்போயிற்று.

சமாசாரம்.

பீபில்ஸ்பார்க்து என்னும் சென்னைச் சிங்காரத்தோட்டத்தில் நடக்கும் வருஷாந்த வேடிக்கைகள்: — சென்ற இரண்டு மூன்று வருஷமாக நடந்ததுபோலவே வருகிற 1883–ஆ துவக்கத்திலும் மேற்படி சிங்காரத்தோட்டத்திலே, டிசம்பர்மீ 28, 29, 30–ம் தேதிகளிலும், அடுத்த ஜனவரிமீ 1, 2, 3–ம் தேதிகளிலுமாக ஆறுநாள் வேடிக்கைகள் நடத்தப்படுமோம். அதனால் சென்ற வருஷங்களைப்பார்க்கிலும் வருகிறவருஷம் நடத்தப்போகிற வேடிக்கைகள் காண்போர்களுக்கு வெகு மகிழ்ச்சி உண்டாக்குவதாயிருக்கும். இதுவரை மூன்றுநாளைக்குமேல் ஒருவருஷமும் வேடிக்கை நடத்தினதில்லையே. இவ்வருஷம் ஒருவாரம்வரையில் அவ்விநோதங்களைக் கண்டு களிக்கும்படியாகின்றது.

புஷ்பவிநோதக்காட்சி: — வருகிற 1883–ஆ பிப்ரவரிமீ கடை சனிக்கிழமையன்று சென்னை துரைத்தனத்தாருடைய விநோதமான செடிகொடிகளமைந்த பூந்தோட்டத்தில் பிரஜைகளுக்குப் புஷ்பவிநோதக்காட்சியொன்று காண்பிக்கப்போகிறார்களாம். அவ்வண்ணமே வருஷவாரி நடத்தப்படுமென்கிறார்கள்.

தூமகேது அல்லது வால்நக்ஷத்திரம்: — இப்போது ஒருமாதகாலமாய்க் காலைவேளையில் கீழ்த்திசையிலே கீழிருந்து மேனோக்காய் நான்குமார் நீளம்நீண்டு மிகவும் அகன்ற ஒரு வாலோடுகூடிய வால்நக்ஷத்திரமொன்று தோன்றுவதை வெகுவாய் இத்தேசத்தார் அனைவரும் கண்டிருக்கலாம். இப்படிப்பட்ட வால்நக்ஷத்திரங்கள் அநேகம் சூரியமண்டலத்தைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கின்றனவென்றும், ஏறக்குறைய எழுபதுவருஷத்துக்கு ஒருதரம் அவை சூரியனைச் சுற்றி ஒரு சுற்று வருகின்றனவென்றும் ஐரோப்பிய ஜோதிடசாஸ்திரிகள் ஊகித்துச் சொல்லுகின்றனர். ஆயினும் இவைகளுடைய நுட்பங்களை அவர்களும் இன்னும் தெளிவாய்த் தெரிவிக்கவில்லை. இத்தேசத்து ஜோதிடசாஸ்திரிகள் தூமகேதுக்கள் நமது கண்ணுக்குத் தோன்றக்கூடாதென்றும், தோன்றினால் அக்காலத்தில் பல கெடுதிகள் நேரிடுமென்றும் சொல்வதுண்டு. அதற்கேற்றபடியே இப்போது பல இடங்களில் மிதமிஞ்சி மழைபெய்தும், பற்றறப் பெய்யாமலும் பிரஜைகளுக்குப் பலவிதமான நஷ்டமும், ராஜாக்களுக்குக் கலகமுண்டாகி அதனால் அநேகவிதமான தீமைகளுமுண்டாகின்றனவென்று காட்டுகிறார்கள். நமது நாட்டில் இவ்வடிவமுள்ள வால்நக்ஷத்திரத்தைப் பார்த்த விருத்தர்கள் ஒருவருமில்லை. இருநூறு வருஷங்களுக்குமுன் ஒருதரம் தோன்றியிருக்கலாமென்று உத்தேசிக்கலாகும்.